# சிற்பத்தின் சக்தி

தே.ப.[illegible]ள்

கவிக்குயில் நிலையச் சுடர் 11

# சிற்பத்தின் சக்தி

(சிறுகதைகள்)

தே. ப. பெருமாள்

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வல
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

கவிக்குயில் நிலையம்.
கோட்டாறு, தென் திருவிதாங்கூர்.

1948 ஜனுவரி

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 422
நன்கொடை எண்: 422



‘முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்’
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை

எம், எஸ். எம். பிரஸ், நாகர்கோவில்.

# நூலைப் பற்றி.

---

பல ஆண்டுகளுக்கு முன் எனது கதையொன்று ஆனந்த விகடனில் வெளி வந்தது. அதைப் படித்து மகிழ்ந்த எனது நண்பர்களில் சிலர் என்னை அதிகமாகக் கதைகள் எழுதத் தூண்டினர். அவர்கள் தூண்டிய உணர்ச்சியின் ஒரு சிறு முயற்சியே இந்நூல்.

இக்கதைகள் நீதியைக் கற்பிப்பதற்காக எழுதியவை அல்ல, எனது வாழ்க்கை வீணையில் பலப்போழ்து பல நிகழ்ச்சிகள் இசைத்த நாதக் கூட்டமே இக்கதைகள் இவை ஒருகால் நீதியையும், நேர்மையையும் தெரிவிப்பவையாக இருக்கலாம்; உலக அரங்கில் நிகழும் பல அட்டூழியங்களையும், ஆசைகளின் துடிதுடிப்பையும் அறிவிப்பவையாக இருக்கலாம்; இதயத்தின் உயரிய குறிக்கோளைத் தெளிவுபடுத்துபவையாக இருக்கலாம்; அதில் ஏற்படும் வெற்றி, தோல்விகளை நினைவுபடுத்துபவையாகவும் இருக்கலாம்; ஆனால் ஒன்று, இவையெல்லாம் உணர்ச்சியென்னும் மூளைகளிலிருந்து வெடித்தவையேயாகும்.

இவைகளைத் தமிழுலகம் ஆர்வமுடன் படிக்கும் என்ற நம்பிக்கையில் வெளியிட முன் வந்தேன். இவைகளைப் பற்றி எக்கருத்தையும் வெளியிட அதற்கு உரிமையுண்டு. ஆகவே இவற்றைப் பற்றி நான் வேறு என்ன சொல்ல வேண்டும்?

அவ்வப்போது இக்கதைகளைத் தமது பத்திரிகைகளில் வெளியிட்டு என்னை ஊக்கப் படுத்திய பத்திரிகையாசிரியர்களுக்கு என் இதய நன்றி.

**தே. ப. பெருமாள்.**

# பதிப்புரை.

கவிக்குயில் நிலையத்தின் பதினொன்றாவது வெளியீடாக 'சிற்பத்தின் சக்தி' என்ற இக்கதைத் தொகுதி வெளி வருகின்றது. இதைத் தமிழன்னையின் முன்னிலையில் வைக்கின்றோம்.

இந்நூலாசிரியர் திரு. தே. ப. பெருமாள் அவர்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இவர் சிறந்த கவிஞர்; நல்ல தேச ஊழியர்; தொழிலாளர் மத்தியில் நீண்டகாலம் உழைத்து வருபவர். இவரது கவிதைகளைத் தமிழுலகம் நன்றாக அனுபவித்து அறிந்திருக்கின்றது. இப்போது இவர்தம் புது முயற்சியின் விளைவாகக் இக்கதைத் தொகுதி வெளி வந்திருக்கின்றது.

கதைகள் அனைத்தும் உணர்ச்சி ஓவியங்களாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. சில, இவரது கவிதையாற்றலின் சின்னமாக இலங்குகின்றன. இன்னுஞ் சில, ஏறக்குறைய இவர் இருபது ஆண்டுகள் தொழிலாளராக இருந்து கண்டறிந்த அனுபவத்தின் சாயலாகக் காட்சி தருகின்றன. ஒன்றிரு கதைகள் இவரது நாட்டுப்பற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

தமிழுலகு இந்நூலுக்குச் சிறந்த வரவேற்பளிக்கும் என்று நம்புகிறோம்.

கவிக்குயில் நிலையத்தார்.

# உள்ளுறை

**பொருள்** **எண்**


| | |
|---|---|
| சிற்பத்தின் சக்தி | 9 |
| நன்றிகெட்ட உலகம் | 17 |
| மௌன மன்னிப்பு | 25 |
| கடமை | 33 |
| இரண்டு மண்டபங்கள் | 38 |
| அவன் திருடனா? | 49 |
| அவள் | 57 |
| ஏமாற்றம் | 64 |
| அத்தர் வியாபாரி | 71 |

## இந்நூலாசிரியரின்
## பிற நூற்கள்.

| | |
|---|---|
| தமிழ்ச்சுனை | (கவிதைகள்) |
| இயற்கையின் நடனம் | (கவிதைகள்) |

## விரைவில் வெளி வருபவை.

| | |
|---|---|
| குழந்தை அரங்கு | (குழந்தைப்பாடல்கள்) |
| கவிமணி தே.வி. | (வாழ்க்கைச் சரிதம்) |
| அழகும் வாழ்வும் | (கட்டுரைகள்) |
| வேய்ங்குழல் கீதம் | (கவிதைகள்) |

அவ்வை

## சிற்பத்தின் சக்தி.

அமீர் அலியின் படையெடுப்புக் காலத்தில் அந்தச் சிற்பியைப்போல் யாருமே அவ்வளவு துன்பப்பட்டதில்லை. அவனுக்குத் தான் பிறந்த நாட்டின் சுதந்திர அழிவைப் பற்றிய கவலை ஒரு பக்கம். மற்றொரு பக்கம் தனது அருமைச் சிற்பம் உடைபடுமே என்ற கவலை. இந்த உலக வாழ்வில் அவனது உயிர் நிலைத்திருப்பதற்கு ஒரே காரணம் அந்த அழகுச் சிற்பம்தான். அது பகையரசனின் படையெடுப்பால் உடைபட்டால் இந்த உலகம் அவனுக்கு அந்தகாரம். அவனுக்கு இங்கே வாழ்க்கை வேண்டிய அவசியம் இல்லை.

சிற்பத்தைப் பற்றிய கவலையால் அவன் சாப்பாட்டையே மறந்தான், சதா இந்தத் துக்கத்தால் மெலிந்து காணப்பட்டான். அவனது முகம் பொலிவிழந்திருந்தது. கண்களினின்றும் வடிந்த கண்ணீர் துடைபடாததினால் அது வடிந்த அடையாளம் நன்றாகத் தென்பட்டது. அந்தச் சிற்பத்தை விட்டு அவன் ஒருபொழுதும் விலகவே இல்லை. இரவுக் காலங்களில் வானகத்தில் சுடர்விடும் நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டே அவன் அதைக் காத்து வந்தான்.

-2-

மாதவச் சிற்பி நாற்பதுக்கும் குறையாத வயதுடைய வன். அழகு நிரம்பிய உடல். அவனது கண்கள் கருணைக் களையால் நிறைந்திருந்தன. துன்ப வாழ்க்கையிலும் அருள் வீசிக் கொண்டிருந்த அவனது முகம் அவன் ஓர் சிறந்த கலைஞன் என்பதைத் தெளிவாகக் காட்டியது.

இவன் இதுவரையிலும் தனது வாழ்வில் இரண்டு மூன்று சிற்பங்களே செதுக்கியிருந்தான். ஆனால் அவை அழியாத் தன்மை கொண்டவை. அவை வெறும் உருவ மாக இராமல் உணர்ச்சியை எழுப்புபவைகளாக இருந்தன. மனிதனின் சௌந்தரிய உணர்ச்சியை அருவியின் நீர்ப் பெருக்குபோல் நிறைவிக்கும் சக்தி அவைகள் பெற்றிருந்த தால் அவற்றை எல்லோரும் பேசும் சிற்பம் எனப் பேசிப் புகழ்ந்தார்கள். மாதவச் சிற்பியின் கலைத்திறனால் அவனுக் குக் கலை உலகில் ஓர் தனியிடம் கிடைத்தது.

மாதவச் சிற்பிக்குக் கலியாணம் ஆன ஐந்தாம் வருடத் திலேயே அவன் மனைவி இறந்தாள். அதன் பிறகு அவள் விட்டுப்போன ஆண் குழந்தை ஒன்றுடனேயே அவன் தனது நாட்களைக் கழித்து வந்தான். மனைவியின் பிரிவு அவனை மிகவும் வாட்டியது. ஆயினும் அந்தச் சோகம் குழந்தை ராகவனால் நீக்கப்பட்டு வந்தது.

அவனது மனைவியின் உயர்ந்த குணங்கள் அவனை இரண்டாம் விவாகம்செய்யச் சம்மதிக்கவில்லை. இந்த உலகத் தில் ராகவன் சிறந்த செல்வம் என்று கருதினான். அவனைக்

கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தான். குழந்தை ராக வனின் முற்ருத விளையாட்டும், இனிக்கும் மழலைப் பேச்சு களும் அவனுக்குப் பேரானந்தத்தை உண்டாக்கின.

-3-

வாழ்க்கை வண்டி என்றும் ஒரே நிலையில் ஓடுவதில்லை. அது துன்பத்தையும், இன்பத்தையும் சமமாக மிதித்துச் செல்கின்றது. மாதவச் சிற்பியின் வாழ்வில் மனைவிக்குப் பின் மகிழ்ச்சியைக் கொடுத்தது ராகவன். இந்த மகிழ்ச்சி யும் நிலைத்திருக்க இயற்கையின் சித்தம் இரங்கவில்லை. ராக வன் நோய்ப் படுக்கையில் படுத்தான். நோயின் சக்தி அதிகப் பட்டது. இரவு பகல் மாதவன் ராகவனைக் குணப்படுத்த முயன்ருன். அவனது முயற்சியெல்லாம் வீணுயது. கொடிய நோய் ராகவனது உயிரை உண்டு ஏப்பமிட்டு நர்த்தனம் செய்தது. ராகவனைப் பிரிந்த துயரால் மாதவச் சிற்பி இரண்டுநாள் உணர்விழந்திருந்தான்.

மாதவச் சிற்பிக்கு வாழ்வு கசந்தது. அவன் அஸ்தி வாரம் இட்டிருந்த வாழ்வின் குறிக்கோள் அழிந்தது. உலகத்தை வெறுத்தான். மனம் சென்ற இடங்களிலெல் லாம் அலைந்து திரிந்தான். உணவுக்கு அவசியப்பட்ட வேளை கையில் கிடைத்ததை உண்டு பசி நீக்கி வந்தான். இவனது இந்தத் துன்பக் கோலத்தைக் கண்ட பலர் இவனுக்கு ஆறு தல் சொன்ஞர்கள். உலக நிலையாமையைப் பற்றி உரைத் தார்கள். இம் மொழிகளை அவனது செவிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டதாகச்

சிலர் சொன்ன மொழிகள் மட்டும் அடிக்கடி இவனது காதுகளில் ஒலித்து வந்தன.

-4-

அந்திப்பெண் அழகிய தன் பொன்னுடையை விரித்துக் கொண்டிருந்தாள். பறவைகள் கலகல என்ற சப்தத்துடன் கூடுகளை நோக்கிக் கூட்டமாய்ப் பறந்து சென்று கொண்டிருந்தன. கடலையும், காட்டையும், இன்னும் எவ்வளவோ இடங்களையும் தாண்டிவந்து இளந்தென்றல் ஜிலுஜிலு வென்று வீசியது. மாதவச் சிற்பி எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கடைசியாக அந்தப் பாறையின் அடிப்பாகம் வந்து சேர்ந்தான். இயற்கைத் தேவியின் இன்பக் கோலம் அவனை வசீகரித்துவிட்டது. தன்னை மறந்து சௌந்தர்ய தேவதையின் பாதத்தை வருடிக் கொண்டிருந்தான். அவனது மனக்கடலில் துன்ப அலைகள் ஓய்ந்து சாந்தம் நிலவியது.

ஓர் எண்ணம் திடீரென அவனுக்குப் பிறந்தது. அவன் அதிலேயே தன் சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருந்தான். அந்தச் சிந்தனை உருப்பெற்றது. தனது கருவிகளை எங்கிருந்தோ தேடிப் பிடித்துக்கொண்டு வந்தான். அப்பொழுதே வேலையைத் தொடங்கினான். மூன்று மாதங்களின் முயற்சி; சலியாத உழைப்பு; இவற்றின் பயனாகக் கிடைத்தது ஓர் அழகிய சிற்பம். அது ராகவனின் உருவம்.

மாதவச் சிற்பியின் இதயத்தின் அடித் தட்டினின்றும் எழுந்த உணர்ச்சியால் அந்தச் சிற்பம் பூர்த்தி அடைந்

இருந்தது. தாயை இழந்த அவனின் தோற்றம் உள்ளத்தில் இரக்க ஊற்றைச் சுரக்கச் செய்தது. ராகவனின் உண்மை உருவத்தைவிட இந்தக் கல்லுருவத்தில் எல்லையற்ற மந்திர சக்தி குடிகொண்டிருந்தது.

இந்தச் சிற்பத்தின் தோற்றத்தால் மாதவச் சிற்பியின் துக்கம் குறைந்து குறைந்து மறைந்தது. சிற்பத்தை ராகவனின் உண்மை உருவமென அந்தக் கலைஞன் எண்ணினான். அதனுடன் பேசி விளையாடுவான். அதற்கு மாலை சாற்றி அழகு பார்ப்பான்.

இந்தச் சிற்பத்தை மக்கள் எல்லோரும் பார்த்து மகிழ்ந்தார்கள். கலையன்னை இப்பொழுது புதியதோர் அழகு பெற்றுளென்று அவர்கள் புகழ்ந்தார்கள். மாதவச் சிற்பியின் பெயர் இனி இந்த உலகத்தில் அழியப் போவதில்லை என்று சொன்னார்கள்.

மாதவச் சிற்பி தன்னுயிரைவிட அந்தச் சிற்பத்தை அதிகமாக நேசித்தான். அதை ஒரு சம நிரப்பான இடத்தில் நிலைநாட்டினான். அதைச் சுற்றிப் பூஞ்செடிகள் நட்டு வளர்த்தான். இரவும் பகலும் அவன் அங்கேயே பொழுதைப் போக்கி வந்தான்.

இதே சமயத்தில்தான் அமீர் அலியின் படை அந்தப் பக்கங்களிலுள்ள சிற்பங்களையும், இன்னும் பல கலைச்சின்னங்களையும் அழித்துக்கொண்டு வந்தது. இந்தக் கொடிய செய்கை சிற்பியின் உள்ளத்தைச் சுக்கு சுக்காய் உடைத்துவிட்டது. தன் சிற்பமும் அந்தப் படையால் எங்கே அழிந்து

படுமோ என்ற கவலையால்தான் அவன் அந்தச் சிற்பத்தை விட்டுப் பிரியாது காத்து வந்தான்.

–5–

கொடுங்காற்றைப்போல் அன்று அமீர் அலியின் படையின் ஒரு பிரிவு மாதவச் சிற்பியையும் அவனது சிற்பததையும் சூழ்ந்தது. மாதவச் சிற்பி அவர்களை இரக்கமுடன் வேண்டினான். அந்தச் சிற்பத்தை உடைக்க வேண்டாம் என்று மன்றாடினான். அது தனது வாழ்வின் சுடரொளி எனறும், தனது உடலின் உயிரென்றும் அந்தச் சிற்பத்தைப் பற்றிக் கூறி அதைக் காக்க அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி வேண்டினான்.

கருணை விளக்கணைந்த அவர்கள் உள்ளம் இதற்கிசையவில்லை. அவர்கள் தங்கள் அரசன் ஆணையைக் காப்பது தங்களின் கடமை என்றார்கள். ராகவனின் சிற்பத்தை உடைக்க அவர்கள் துணிந்து விட்டார்கள்.

சிற்பியின் மனநிலை மாறியது. உணர்ச்சியின் எல்லை ஓங்கியது. உடம்பில் இரத்தம் ஓடும் வரை, கடைசி மூச்சு சாயும் வரை சிற்பத்தைக் காக்க வேண்டுமென உறுதி கொண்டான். கையில் கிடைத்த குறுந்தடியுடன் அந்தச் சிறு கும்பலை எதிர்க்கத் தொடங்கினான். உயிருக்குப் போராடுவதாக எண்ணி அந்தப் படைகளுடன் அமர் புரிந்தான். ஆவேசத்துடன் உறவு கொண்ட அவனது சிலம்ப அடி அமீர் அலியின் அந்தச் சிறு படையைக் கணத்தில்

ஓட்டி விட்டது. மூன்றுபேர் மட்டும் மண்டை உடைந்த தினுல் தரையில் சாய்ந்தனர்.

அங்கே தோன்றினன் அமீர் அலி தன் படையுடன். மாதவச் சிற்பியை ஏற இறங்கப் பார்த்தான். அவனது சிற்பத்தை நோக்கினன். அரச புத்திக்கு அக் காட்சி பெரும் விருந்தளித்தது. மாதவச் சிற்பியின் வாழ்க்கைப் படம் அந்தச் சிற்பம் என்பதை அக் கலைமன்னன் நொடி யில் உணர்ந்தான்.

இரக்கச் சாயலில் வெயிலும், மழையும் தாங்கி நின்ற அந்தச் சிற்பத்தின் சௌந்தர்யத்தில் அமீர் அலி மூழ்கி விட்டான். அவனது இதய வீணையில் சிற்பத்தின் சாயல் சோக கீததத்தை இசைத்தது. அதனுல் அங்கே கருணை மலர்கள் மலர்ந்தன. அமீர் அலியின் கண்களினின்றும் கண் ணீர் வடிந்தது. கலையுருவம் தூண்டிய உணர்ச்சியின் முன்னே மத உணர்ச்சியும், பகை வெறியும் தலை குனிந்தன.

கலையின் சக்திக்கு சிற்பத்தின் சக்திக்கு நான் தோற் றேன் என்பதாக அவன் கண்கள் அவனது படைக்கு அறி வித்தன. அந்த நாட்டின் எல்லையை விட்டுத் தன் படைகளை அகலுமாறு அவன் அவைகளுக்கு ஆணை செய்தான்.

அமீர் மாதவச் சிற்பியை கைகூப்பி வணங்கினன். நடந்த கொடுமையை மன்னிக்க இரந்து வேண்டினன்.

மாதவச் சிற்பியின் உள்ளத்திலே இன்ப உணர்ச்சி மின்னல் திடீரெனத் தோன்றி உடலெங்கும் நிறைந்தது. அவனது கண்களும் அன்புக் கண்ணீரைச் சிந்தின. அரசனை அவன் வாயார வாழ்த்திப் புகழ்ந்தான்.

சிற்பியின் கலைத் திறமைக்காக அமீர் அவனுக்கு ஒரு பொன் மாலை பரிசளித்தான். பின் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு அவ்விடம் விட்டகன்றான்.

# நன்றிகெட்ட உலகம்.

கந்தன் அந்தக் கடையில் வேலைக்கு வந்து ஆண்டுகள் இருபது முடிந்துவிட்டன. அந்தக் கடையின் ஆரம்ப காலம். கந்தன் வீட்டு வறுமை வாழ்க்கை, பிள்ளைப் பிராயம் தாண்டும் முன்னரே அவனை அந்தக் கடையில் கொண்டு சேர்த்தது.

கடைக்குக் காலையில் எட்டு மணிக்கு வரவேண்டும். பகல்பொழுது வீடு சென்று சாப்பிட்டுவர ஒரு மணி நேரம் உண்டு. பிறகு இரவு பதினொரு மணிக்கே வீடு வர முடியும். இதன் மத்தியில் ஓயாத வேலை; ஓட்டம்; சாட்டம்; உழைப்பு. மாதம் கிடைக்கும் ரூபாய் மூன்று. கந்தனின் பெற்றோருக்கு அந்தக் காலத்தில் அந்த மூன்று ரூபாயும் பெரு நிதியாக இருந்தது.

கந்தனின் தந்தை முருகேசபிள்ளை இரவு பதினொரு மணி வரையிலும், தனது மைந்தனுக்காக அவனது கடை அடைக்கும் வரை கடைப்பக்கத்துத் திண்ணையில் வந்து காத்திருப்பார். சில நாட்களில் அந்த இடத்திலேயே அவர் உறக்கமும் கொண்டு விடுவார். பின் கந்தன் கடை பூட்டி வந்து அவரை எழுப்புவான். இருவருமாகப் பிறகு

வீடு வந்து சேர்வார்கள். மகன் இருட்டில் தனிமையாக வரும்போது ஒருவேளை பயந்துவிடக் கூடாது என்பது தான் பாசம் நிறைந்த அந்தத் தந்தையின் இதய எண்ண மாகும்.

வியாபாரம் கடையில் நடந்து கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் கடை பூட்டுவது இரவு அந்தச் சரியான மணி பதினொன்றுக்குத்தான். வியாபாரம் இல்லாத சம யங்களில் சில சோம்பேறிகள் அங்கு வந்து சேர்வார்கள். ஊர் வம்புகளெல்லாம் அங்கே அடிபடும். உலகச் செய்தி களைப் பற்றிய பேச்சுகள் நடைபெறும். முதலாளியும் வந்தவர்களுடன் சேர்ந்து பொழுதைக் கழிப்பார். ஆனு லும் வியாபாரம் நடவாத அந்தச் சமயத்திலாவது சிறிது முன்னேரத்தில் கடை பூட்ட அவர் மனம் இசையாது.

இத்தகைய மனப்பான்மை படைத்த முதலாளியின் கடையில் கந்தன் இருபதாண்டுகள் கழித்தது பெரிய காரியமே. இந்த இருபதாண்டுகளில் அவனது இளமை யின் சக்தியெல்லாம் முதலாளியின் கொள்ளை லாபத்திற் குச் செலவு செய்யப்பட்டது. அவனது ஊக்கமும், உணர் வும், அறிவின் விரிவும் முதலாளியின் ஆக்கத்திற்காகவே அர்ப்பணம் செய்யப்பட்டன. இந்தத் தொண்டினுல் முத லாளி ஆனந்தபோக வாழ்வைக் கண்டார். கடைவீதியில் அவர் முதல் முதலாளியானுர். அவரின் பெருமையும் மதிப்பும் மிகவும் உயர்வு பெற்றன.

-2-

கந்தன் கடைக்கு வந்த இருபதாண்டுகளிலும் அவன் மனவேகத்துடன் ஒத்து உலகத்திலும் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. காடடர்ந்த இடங்கள் நாடாயின. குடில்களும் கூரைவேய்ந்த வீடுகளும் இருந்த இடத்தில் பெரிய மாடங்களும் மாளிகைகளும் தோன்றியிருக்கின்றன. குடிப் பள்ளிக்கூடம் இருந்த இடத்தில் உயர்ந்த கலாசாலை வந் திருக்கிறது. ஏழையாக இருந்தவன் பணக்காரனுகியிருக் கிறுன். செல்வந்தர்களாக இருந்து அறம் வளர்த்த வள் ளல்கள், பிச்சைக்காரர்களாகத் திரிகிறுர்கள். எவ்வளவோ உயிர்கள் உலகத்தைவிட்டு மறைந்தன. புதிய ஜீவன்களின் தோற்றம்! இன்னும் எவ்வளவோ மாறுதல்கள்!

கந்தன் வாழ்விலும் மாறுதல்கள் நிகழாமலில்லை. அவனது தாயும், தந்தையும் காலம் என்னும் கடலில் மறைந்தார்கள். தனது உழைப்பின் இடையே கட்டிய சிறு வீட்டில் இப்போது அவன் தன் மனைவியுடனும், மூன்று குழந்தைகளுடனும் வாழ்க்கை நடத்தி வரு கின்றுன்.

அவன் மாதச் சம்பளம் பதிமூன்று ரூபாய். இப் போது இதைக் கொண்டுதான் அவன் வாழ்க்கை நடத்த வேண்டும். மிகச் சிக்கனமாகவே செலவு செய்து வந்தான். ஆயினும் கடன்படாமல் வாழ்க்கை நடத்த முடியவில்லை.

மனைவி மக்களின் வாழ்க்கைக்காகத் தனது வாழ்வின் பத்தைத் துறந்தான். குழந்தைகளின் மகிழ்ச்சியில், தனது

உள்ளத்தின் தியாகப் பண்பினுல் ஆனந்தம் கொண்டான். அவர்களின் வாழ்க்கை நலனில் தனது வாழ்வின் வளர்ச்சியைக் கண்டான்.

இந்தச் சிக்கன வாழ்வில் அவன் பட்ட கடன் கடையில் நூறு ரூபாய். சில்லறை சில்லறையாகவே பணம் வாங்கியிருந்தான். ஆனுல் இப்போது தனது கடை முதலாளிக்கு நூறு ரூபாய் கொடுக்கவேண்டும் நிலைமையில் ஆனுன்.

முதலாளியின் நெருக்கம் அதிகப்பட்டது. அவன் குடியிருந்த வீட்டில் அவரது கண்ணின் நாட்டம் சென்றது. கந்தனின் சேவைகள் அவரின் மனதில் படவில்லை. அவன் தன்னிடத்தில் பணி செய்த நாட்கள் அவரது மனத் தடாகத்தில் சலனம் செய்யவில்லை. அவரது மனக் கண்ணை உறுத்தியது அந்த ஒரே நூறு ரூபாய்தான்.

நீண்ட யோசனையின் பிறகு கந்தன் தான் குடியிருக்கும் இல்லத்தை முதலாளிக்கு ஈடு கொடுத்தான். அதில் அவனுக்குச் சிறிதளவாவது வருத்தம் உண்டாகவில்லை. ஆனுல் மேலும் இந்தச் சம்பளத்தைக் கொண்டு எவ்வாறு தன் நாட்களை கழிக்க முடியும் என்பதில்தான் அவன் சிந்தனை இருந்தது.

ஒருநாள் இரவு முதலாளி மிகுந்த மகிழ்ச்சியிலிருந்தார். அதுவே சரியான சமயம் என்பதை அறிந்த கந்தன் அவர் பக்கம் மெதுவாகச் சென்று "எனக்குக்

கொஞ்சம் சம்பளம் கூட்டித் தரவேண்டும்; செலவுக்குப் போதவில்லை. மிகவும் கஷ்டப்படுகிறேன்" என்றுரைத்தான்.

அவ்வளவுதான் தாமதம். முதலாளிக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. சிறிது நேரத்தின் முன்பு மலர்ந்திருந்த அவரது முகம் இப்போது கறுத்துக் கன்னியது.

"அதற்கு நான் என்ன செய்ய? சம்பளம் போதாதென்றால் கடையைவிட்டுப் போயேன். யார் வேண்டாம் என்றார்கள். இந்த வியாபாரத்திலா உனக்கு இன்னும் அள்ளிக் கொட்டவேண்டும்" என்று படபடத்துச் சொன்னார்.

கந்தன் ஒன்றுமே பதில் பேசவில்லை. அவன் இப்போது இந்தக் கடையை விட்டு மாறினால் அவனை வேறு வேலையில் யார் ஏற்றுக்கொள்வார்கள்? ஒருவர் அவனை வேலைக்கு வைப்பதற்குள் முதலாளி உலகம் அவனைப் பற்றிப் பொய்யும் புளுகும் பரப்பி விடுமே.

அதுமுதல் முதலாளி கந்தனைக் கடையை விட்டு வெளியில் தள்ளுவதற்குக் காலம் பார்த்திருந்தார். இதற்காக ஏற்கனவே ஒரு சிறு பையனையும் கடையில் கந்தன் கூட அமர்த்தியிருந்தார்.

இப்போது கந்தனின் செய்கை ஒன்றும் அவருக்குப் பிடிப்பதில்லை. அவன் நல்லது செய்தாலும் அவர் கண்களுக்கு அது கெடுதலாகவே தோன்றும். எப்போதும் அவனிடம் எரிந்து விழுந்தேதான் பேசுவார். அப்படியாவது கந்தன் கடையை விட்டுப் போகட்டும் என்பது அவரின் எண்ணம் போலும்!

-3-

நாலைந்து நாட்களாகக் கந்தனின் கடைசிக் குழந்தைக்குக் காய்ச்சல். அதன் நிலை மிகவும் மோசமாக இருந்தது. மரணதேவதை அதன்மீது தன் அழகிய கரங்களை வைத்துத் தடவிக்கொண்டிருந்தாள்.

கந்தனிடம் கையில் ஒரு காசுகூடக் கிடையாது. கடனும் எங்கும் கிடைக்கவில்லை. ஆகவே வைத்தியரைக் கொண்டு நோயைக் குணப்படுத்த இயலாத நிலையில் இருந்தான். குழந்தைக்குக் கைமருந்துகளே கொடுக்கப்பட்டு வந்தன.

அன்றைய இரவு காலன் குழந்தையை நோக்கிக் கொக்கரித்துக் கொண்டிருந்தான். குழந்தையின் கருவிழிகள் மேல் நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

பயங்கரச் சன்னி. அது குழந்தையைத் தூக்கித் தூக்கி அடித்தது. கைகால்கள் அதன் சக்திக்கும் மிஞ்சி வேலை செய்தன. கந்தன் மனைவியின் துன்ப இதயத்தின் அடித்தட்டினின்றும் கிளம்பிய பரிதாபக் கதறல் நீண்ட இரவில் ஆனந்தமயமாகத் தூங்கிக் கொண்டிருந்த எத்தனையோ மக்களின் தூக்கத்தைக் கூடக் கலைத்துவிட்டது.

இந்தப் பரிதாபக் கதறலின் அழைப்பால் அடுத்த வீட்டுக் கிழவியும் அவள் புதல்வர் ஒருவரும் உதவிக்காகக் கந்தன் வீட்டிற்கு வந்தார்கள். கிழவி கந்தனின் மனைவியைச் சமாதானப்படுத்தினாள். அதுடன் குழந்தையின் நிலைமையைப் பார்த்து "இப்போது ஒரு கம்பளிப் போர்வை வேண்டும்" என்றாள்.

கம்பளிப் போர்வைக்குக் கந்தன் எங்கே போவான்? யாரிடம் இப்போது கேட்கலாம் என்று எண்ணமிட்டான். அவனுக்கு நினைவு வந்தது. தனது முதலாளி வீட்டில் அவன் பலதடவை கம்பளிப் போர்வையைப் பார்த்திருக்கிறான்.

ஓரே ஓட்டமாய்க் கொடிய இருட்டினிடையே முதலாளி வீட்டை நோக்கிப் பாய்ந்தான். கந்தன் வீட்டிலிருந்து முதலாளி வீட்டிற்கு சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும். போர்வை கிடைக்கும் என்ற நம்பிக்கையால் சில விநாடிக்குள் முதலாளி வீட்டின் முன் வாசலைக் கந்தன் அடைந்துவிட்டான்.

கதவைத் தட்டி முதலாளியை அழைத்தான். அழைப்பது கந்தனின் குரல் என்பதை அறிந்ததும் மிகவும் சாவதானமாக, பயமற்ற நிலையில் கதவைத் திறந்தார் முதலாளி.

கந்தன் குழந்தையின் பரிதாப நிலையைக் கூறி கம்பளிப் போர்வையை இரந்து கேட்டான்.

கம்மிய கந்தன் குரலுக்கு முதலாளியின் உள்ளம் இரங்கவில்லை. ஒருவேளை குழந்தை இறந்துவிட்டால் போர்வை தீட்டுப் பட்டுவிடுமே என்ற பயம் இருந்தது அவருக்கு.

“ஐயோ! கஷ்டமாய்ப் போச்சே. போர்வையைச் சலவைக்கல்லவா போட்டிருக்கிறேன்,” என்று தன் மனசாட்சிக்கு விரோதமாய்ப் பதிலளித்தார்.

கந்தனின் நம்பிக்கைக் கோபுரம் சுக்குச் சுக்காய்த் தகர்ந்தது. அவனுக்கு உடலெங்கும் சோர்வு தட்டுப்பட்டது. நடக்கும் சக்தியைக் கூட அவன் இழந்தான்.

முதலாளியின் இதய பாவத்தை மாசுமறுவறக் கண்ட அவன் வீடு வந்து சேர்ந்தான். குழந்தையின் கடைசி மூச்சும் அப்போதுதான் தீர்ந்தது. வறுமைக் காவில் பூத்த மலர் உதிர்ந்து விழுந்தது.

அடுத்த வீட்டுக் கிழவியின் புதல்வர் அந்த சிறு குழந்தையின் உயிரற்ற உடலை மயானக் கரைக்கு எடுத்துச் சென்றூர், கந்தன் அவருடன் மங்கிய விளக்கைத் தூக்கிச் சென்றுன்.

வெற்றுடல் புதைக்கப்பட்டது. உலகின் அமைதி இன்னும் குலையவில்லை. எங்கோ ஒரு நரி ஊளையிட்டது, அதற்கொத்து ஆந்தை ஒன்று அலறியது.

உதயதாரகை கந்தனின் உடைந்த வாழ்வைக் கண்டு ஒளியிழந்து மின்னியது. 'காலைக்கன்னி சுடர்க்கரத்தைத் தூக்கிக் கந்தனுக்குச்சாந்தி அளிததவண்ணம் மேலெழுந்தாள்.

## மௌன மன்னிப்பு.

சலீமின் கண்களுக்கு மேஹருன்னிஸா, வான உலகத்தில் சுற்றித்திரியும் கன்னிகையாகவே காட்சி கொடுத்தாள். சலீம் இளமை என்னும் சோலையில் நின்றான். மேஹர் அந்தச் சோலையில் காதல் கீதம் இசைக்கும் குயிலாகக் கூவிக்கொண்டிருந்தாள். காலை மலரும் ரோஜாவின் நிறம் போன்ற அவள் மேனியின் நிறமும், அமுதம் பெருக்கெடுத்தோடும் அவள் முக அழகும், தேனாக இனிக்கும் அவள் நாதக்குரலும், சலீமின் உள்ளத்தில் இன்ப நினைவுத் திரைகளை எழுப்பின.

வசந்தகாலம் வரும். மலர் மணம் கலந்த தென்றல் ஜிலு ஜிலுவென்று வீசும்; பறவைகள் அமுத கீதம் பாடும். சலீம் மேஹருடன் காற்று வாங்கப் புறப்படுவான். நாள் பூராவும் அந்த மின்னல்கொடியுடன் பேசிக்கொண்டிருப்பான். உலகத்தையே மறந்து அந்த இன்ப வல்லியின் அழகென்னும் மதுவை அருந்துவான். அதில் வெறி கொள்ளுவான். உலகமே இன்பமயமாக அவன் உணர்வுக்குப்படும்.

மேஹருடன் சலீமின் உறவை அக்பர் அறிந்தார். சலீமின் இளம் இதய அரங்கத்தில் மேஹரின் மோஹன உருவம் நாட்டியமாடுவதை அவர் உணர்ந்தார். அவரது சிந்தனைக் கோபுரம் மெள்ள அசைய ஆரம்பித்தது. தனது

குறிக்கோள் எங்கே சின்னபின்னப்பட்டுவிடுமோ என்று அவர் பயந்தார். உடனேயே தனது முயற்சியினால் ஷேர்க்கான் என்னும் வீரனுடன் மேஹரின் திருமணத்தை நடத்தி வைத்தார். தனது புதல்வன் சலீமை வேறுவழி களில் திருப்ப முயற்சி எடுத்தார்.

–2–

சலீமின் உள்ளத்தை விட்டு மேஹரின் உருவம் மறைய வில்லை. "மேஹர் இல்லற வாழ்வில் இணைந்துவிட்டாள், அவள் தனது கணவனுடன் இன்பமாக வாழட்டும்" என்று எத்தனையோ தடவைகள் சலீம் எண்ணியதுண்டு. ஆனால் இந்த எண்ணக்குவியல்களையெல்லாம் சிதறவடித்துக் கொண்டு அவள்மீதுள்ள காதல் என்னும் கொடும் புயல் வேளாவேளை அவனது மனதில் வீசி வந்தது.

ஷேர்க்கான் மகாதீரன். சிங்கத்தைக் கொன்று அவன் தனது வீரத்தை நிலைநாட்டியிருந்தான். முகலாயப்படையில் அப்போது அவனைப்போன்ற வீரர்களே கிடையாது. சலீம் இவனைக் கண்டு கொஞ்சமும் அஞ்சவில்லை. இவன் தனது காதல் வாழ்வுக்கு இடையூறாக வந்தவன் என்பதை உணர்ந்த சலீம் இவனைத் தனது பகைவனாக எண்ணினான். இவனைக் கொன்று தனது காதல் பாதையின் தடையை அப்புறப் படுத்த நினைத்தான். எத்தனையோ நாட்கள் இதைப்பற்றி இடையறாது சிந்தித்தான். ஒரு நாளை இதற்காக நிச்சயப் படுத்தினான், இந்நாளின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். இதற்கு நல்வரவு கூறி அழைத்தான்.

-3-

இரவின் பிற்பகுதி. எங்கும் ஆளரவம் ஓய்ந்திருந்தது. வானகத்தில் மட்டும் சில தாரகைகள் அங்கங்கே சுடர் வீசிக்கொண்டிருந்தன. கொடுங்காற்று இந்த அமைதியைக் குலைத்து அடிக்கடி வீசிக்கொண்டிருந்தது.

படுக்கையறையில் விளக்கு அடிமை நாட்டில் செல்வம் குறைவதுபோல் மெல்ல மெல்ல மங்கி எரிந்துகொண்டு வந்தது. கடைசியாக அணைந்தும் விட்டது. மேஹரின் வீடு பூராவும் ஒரே இருட்டு. அந்த இருட்டிலும் ஒரு சிறு ஒளி எங்கும் நிலவியது.

மேஹர் ஒரு உறக்கம் உறங்கி இரண்டாவது உறக்கத்தில் மூழ்கும் வேளை. யாரோ அயலான் தன் பக்கம் வருவதாக அவள் மயங்கிய கனவைக் கண்டாள். அது நனவோடு கலந்த கனவா? அவளுக்கே சந்தேகம்! அந்த நித்திரையின் மத்தியிலே தனது கண்களை வலுவுடன் திறந்து அந்த இருட்டினுள் தனது பார்வையைச் செலுத்தினாள் அவள். ஆம், ஒரு உருவம் அவளை எதிர்நோக்கி வந்துகொண்டிருந்தது! இது உண்மையா? அல்லது கனவின் கலக்கமா? மேஹர் தனது கண்களை நன்றாகத் தடவிக்கொண்டு பின்னும் பார்த்தாள். சந்தேகமே இல்லை. ஒரு மனித உருவம் முக்காடணிந்து அவள் பக்கம் வந்துகொண்டுதானிருந்தது.

“யார் அது?” என்று வாளை உருவிய வண்ணம் கேட்டாள் மேஹர்.

பதில் இல்லை.

"சொல்கிருயா என்ன? அல்லது உனது உடலை இப்பொழுதே இரண்டுபடுத்திவிடுவேன். நீ யார்?" என்று பின்னும் அவள் வாயினின்றும் சொற்கள் பிறந்தன.

அந்த உருவம் முக்காடைக் கழற்றி "மேஹர், என்ன கோபப்படுகிருய்! நான் தானே, உனது சலீம், தெரியவில்லையா?"

"என்ன சலீமா? எனக்கு நம்ப முடியவில்லையே. ஏன் இந்தப் பயங்கர இரவில் நீ ஒளிந்து இங்கே வந்தாய்?"

"மேஹர், அவன் எங்கே உறங்குகிருன்? அந்த ஷேர்க்கான், அவனை ஒரே வெட்டாக வெட்டி நமது காதல் பாதையை மறுபடியும் திறப்பதற்காகவே வந்திருக்கின்றேன். கண்ணே! அவனை எங்கே, காட்டு. சுடர் வீசும் இந்த வாள் முனையால் அவனை எழுப்புகிறேன்."

"ஏ தீர்க்க புத்தியற்ற சலீம்! நீ என்ன பேசுகிருய்? யாரின் முன்னிலையில் நீ இவ்வாறு பேசுகிருய். பெருமை மிக்க முகலாயக் குடும்பத்தில் பிறந்தவனு நீ! அன்னியர் வீட்டிலே இந்த இரவு வேளையில் கோழைபோல் வந்து இந்த இழிவான எண்ணம்! வெட்கம் என்பது கொஞ்சமும் இல்லையா உனக்கு? இப்பொழுதே சென்றுவிடு. இன்னும் ஒரு நொடி இங்கே தாமதிப்பாயானல் இப்பொழுதே கூக்குரலிட்டு அமைதி நிறைந்த இந்த இரவைக் கலைத்து விடுவேன், போ, வெளியே."

"மேஹர்! நீ என்னை மறந்துவிட்டாயா? அந்தச் சந்திரிகை இரவில் நீ என்னோடு பேசிய மொழிகள் உனது

நினைவுத்திரையைவிட்டு அழிந்து விட்டனவா? பழயபடி நீ என்னை நினைவுபடுத்திக்கொள்"

"சலீம், நீ யாருடன் பேசுகிருய் என்பதை எண்ணிப் பேசு. ஒரு பதிவிரதா உத்தமியுடன் நீ பேசுகிருய்! அவளுடன் பேசத் தகுந்த மொழிகளைத்தான இப்போது நீ பேசிக்கொண்டிருக்கிருய், எண்ணிப் பார்."

"என் இன்பக்கொடியே! மேஹர், கொஞ்சம் சாந்தம் கொள், நேற்றுவரை நாம் யாராக இருந்தோம், நமது உறவு எந்த முறையில் இருந்தது? ஒன்ருக உலவி, ஒன்ருகப்பேசி, ஒன்ருகக் களிக்கவில்லையா? எனக்கு அவகாசப் பட்ட ஒரு பெண்ணை இன்னொருவன் கொண்டுசெல்ல, நான் பார்த்துக்கொண்டிருப்பதா? இதை என்னுல் பொறுக்க முடியுமா? யோசி"

"சலீம், நீ இன்னும் இப்போதைய எனது நிலைமையை உணரவில்லை. முன்னே உன்னேடு சுற்றித்திரிந்த மேஹர் அல்ல நான். இப்போது நான் ஓர் பதிவிரதா உத்தமப் பெண். இல்லறத்தில் தனது உள்ளத்தைப் பறிகொடுத்து தனது புனிதத்தைத் தன் மனம், மெய், மொழிகளால் பாது காக்கும் ஒரு பெண்ணிடம் நீ இவ்விதம் பேசலாமா? நாளை இந்த உலகுக்கே ஏக சக்ராதிபத்யம் செலுத்தவரும் ராஜாதி ராஜன் நீயல்லவா? உனக்கு இச்செயல் பொருந்துமா? அரசு அறத்தை நீ மறந்தாயா? சலீம், உன்னை வேண்டுகிறேன் பழய உறவை மறந்துவிடு, வெளியே போ."

"எனது எண்ணத்தை முற்றச் செய்தில்லாமல் நான் வெளியே போக விரும்பவில்லை. நமது வாழ்வை இரண்டு படுத்தவந்த அந்தக் கொடியவனைக் காட்டு."

"பின்னும் நீ அந்த எண்ணத்தை விடவில்லையா? ஏ சலீம்! நீ எங்கே உனது அதிகாரத்தைக் காட்டுகிறாய்? இந்த எனது இல்லத்தை உனது சாம்ராஜ்யம் என்று நினைத்தாயா? இது எனது கற்பு உலவும் தேசம், இந்த வீட்டின் ஒவ்வொரு கல்லும், கணவன் பணி என்னும் நீரால் நனைந்திருக்கிறது. அவனுக்குக் காட்டும் ஒழுக்கத்தால் துவைந்திருக்கிறது. இங்கு வீசும் தென்றலில் கற்பு மணத்தின் வாசத்தை நீ முகர்வாய்! சலீம், நான் உன்னிடம் சொல்கிறேன். எனது உயிர் உடலில் இருக்கும்வரை எனது நாயகனை யாரும் ஒன்றும் செய்ய இயலாது என்பதை உணர்ந்துகொள். இனி நேரங் கடத்தாதே, போ விரைவாக வெளியே.


சலீமின் மனக்கோட்டை மேஹரின் பரிசுத்த வீரதர்ம மொழிகளால் சுக்குச் சுக்காய்த் தகர்ந்தது. தன்னுடன் பேசுவது அந்தப் பழய மேஹருன்னிஸாதானு என்று கூட அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஒன்றையுமே அவனுக்கு நம்பமுடியவில்லை.

கற்புடைய ஓர் பெண்ணிடம் சலீம் தோற்ருன். அவனுடையகாதல் பயிர் மேஹர் விடுத்த சரமொழி என்னும் கோடையால் கருகிற்று. அவன் நெடு மூச்சுவிட்டான்.

"மேஹர், நான் உன்னைப்பற்றி இதுவரையும் ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்தேன். அதை நீ கலைத்து உண்மை

நிலையைத் தெளிவுபடுத்தினாய், நான் செய்ய வந்த செயலுக்கு நீ என்னை மன்னித்துவிடு. நான் இதோ போகிறேன்." என்று சலீம் அவளைப் பார்த்துச் சொன்னான்.

அவள் ஆடாமல் அசையாமல் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தாள். பிச்சை கேட்டும் கிடையாத ஒரு பிச்சைக்காரன்போல் அவன் திரும்பிக்கொண்டிருந்தான். அவள் இதை அந்தக்கொடிய இருட்டிலும் கூர்மையாகக் கவனித்துக்கொண்டு நின்றாள். அவள் கையைவிட்டு வாள் தானாகவே நழுவிவிட்டது. அது மௌன மன்னிப்பின் அறிகுறியோ என்னவோ! அவன் போய்க்கொண்டே இருந்தான். அவள் பார்த்துக்கொண்டே நின்றாள்.



## கடமை.

கருணன் நோய்வாய்ப் பட்ட தன் குழந்தையின் பக்கம் உட்கார்ந்திருந்தான். அவன் மனைவி சுந்தரி ஓர் பக்கம் ஒதுங்கி நின்றுகொண்டு குழந்தையிடம் தன் பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தாள். தாயின் அன்பு, வருந்திய நெஞ்சத்தின் அடித்தளத்தினின்றும் நீராய் உருகி அவளது கண்களினின்றும் மலமலவென்று உதிர்ந்து கொண்டிருந்தது. தனது குழந்தை பிழைக்கவேண்டுமென்று அவளது உள்ளம் துடி துடித்தது. தமது எதிர்கால இன்பமென்னும் அரும்பு எங்கு விரியாது வெம்பிவிடுமோ என்று அவள் உள்ளம் ஐயுறவு கொண்டது.

குழந்தைக்கு நாட்டு மருந்துகளே கொடுக்கப்பட்டிருந்தன. ஆங்கில மருத்துவரிடம் காட்டினால் நோய் விரைவில் குறையுமென்று அடுத்த வீட்டுப் பெண்கள் கருணன் பொருளாதார நிலையைப்பற்றி எண்ணாதே சொன்னார்கள். சுந்தரி தங்கள் இல்லாமையை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. குழந்தைக்குக் கொடுத்த நாட்டு மருந்துக்கே இன்னும் பணம் கொடுக்கப்படவில்லையென்பதை அவளைச் சூழ்ந்து வாழும் பணக்காரப் பெண்களிடம் அவள் சொல்லிக் கொள்ளவும் விரும்பவில்லை.

ஐந்து தினங்களாக நாட்டின் பணிக்காக வெளியில் சென்றிருந்த கருணன் அன்று நடுப்பகலில்தான் வீடு வந்து சேர்ந்தான். குழந்தை அடைந்துள்ள கவலைப்படும் அந் நிலையைத் தன் கணவன் முன்னிலையில் அவள் தெளிவாகக் காட்டிக்கொண்டிருந்தாள். தங்கள் அன்புக் களஞ்சியம், தங்கள் மரபை வருங்காலம் விளங்க வைக்க வந்த அந்த ஆசை உயிரை காப்பாற்றும் பொறுப்பு தன்னைப்போல் தன் கணவனுக்கும் உரிமையுடையது என்பதைச் சுந்தரி அறியா தவள் அல்ல. குழந்தைமீது தன் கணவன் எல்லையற்ற அன்பு வைத்திருக்கிறான் என்பதையும் அவள் உணர்ந்த வள்தான். ஆனால் கால நிலை அப்படி வந்திருக்கிறதே.

கருணனுக்குத் திருமணமாகி எத்தனையோ ஆண்டு களுக்குப் பிறகு பிறந்த ஆண் குழந்தை. இரண்டு வயது இன்னும் முற்றுப்பெறவில்லை. அதன் எழிலும், முகமலர்ச் சியும், பருவத் துடியும், கருணனுக்குப் பேரானந்தம் நல்கி யவை. கருணன் சுந்தரி வாழ்க்கை வீணையில் அக்குழந்தை நாதம் இசைத்துக்கொண்டிருந்தது. அந்த நாதத்திற்கும் முடிவு வந்துவிடுமோ என்று அன்று அவன் கவலை வளர்ந்து கொண்டிருந்தது.

* * * * * * *

கருணன் கல்லூரியில் B. A. பட்டம் பெற்றவன். நல்ல செல்வந்தன். அவனுக்குத் திருமணம் ஆகி இரண்டு வருடங்கள் கூட ஆகியிருக்காது. நாட்டில் உரிமைப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது. மக்களெல்லாம் ஒருங்கு திரண்டு அப்போர்த் தீயில் குதித்தார்கள். அந்தப்போர்த் தீயின் வெம்மை மக்களுக்குச் சிறையைக் கொடுத்தது. பட்

டினியைக் கொடுத்தது. அடியும் உதையும் நல்கிற்று. தூக்கு மேடைக்கு வழி காட்டிற்று. ஆனால் மக்கள் கலங்கவில்லை. கடமைக்குப் போராடக் கடல்வெள்ளம்போல் பொங்கித் துடிப்புகொண்டு முன் வந்தார்கள். அவர்களில் ஒருவன் தான் கருணன்.

கருணன் ஏழைமக்கள் துயர வாழ்க்கையைக் கண்டு கண்ணீர் உகுத்தவன். தொழிலாளர் துயர நிலையைத் தகர்த்தெறிந்து இன்ப வாழ்வைப் படைக்க எண்ணமிட்டவன். பாட்டாளி மக்களுக்கு நாடு உரிமையாகவேண்டுமென்ற உணர்ச்சியால் குறிக்கோள் கோபுரத்தின் உச்சியைத் தாவத் திட்டம் வகுத்தவன். அரசு நடத்திய அரசாங்கம் பணக்காரர்களுக்கு ஆதரவு காட்டி வந்தது. அவர்கள் எண்ணத்தை முற்றுபெறச் செய்வதில் முனைந்திருந்தது. கடின உள்ளமும், கைக்கூலியும், ஏமாற்றும், நய வஞ்சகமும் நிறைந்த அந்த அதிகார வர்க்கத்தைச் சவக்குழி தோண்டி அதிற் புதைத்து புதிய ஜனநாயக அரசை நிறுவ முனைந்தவர்களில் கருணனும் ஒருவன்.

கருணன் அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு ஆளானான். ஜெயில் வாசம் ஏற்றான். அடியும் உதையும் பட்டான். இன்னும் எவ்வளவோ இன்னல்களை அனுபவித்தான். அவன் சொத்தெல்லாம் அரசாங்கத்தால் பறி முதல் செய்யப்பட்டது. தரித்திரவாழ்வில் மூழ்கி அவன் நைந்தான். இந்தப் பொழுதிலும், நாட்டுப்பணியைத்—தனது கடமையை அவன் மறக்கவில்லை. துயர வாழ்வில் சுந்தரியும் பங்கு கொண்டு கணவன் லட்சியத்திற்கு அரண் செய்தாள்.

வேண்டிய வசதியும், உதவியும் அவள் செய்து கொடுத்தாள். வாழ்க்கைப் பாரத்தின் நிழல் அவன்மீது படியாமல் அவள் தன் அறிவொளியைப் பரப்பி வந்தாள்.

*  *  *  *  *  *  *

கருணன் வீட்டிற்கு வந்த அன்றைய மாலை ஒரு பொதுக்கூட்டம் இருந்தது. அதற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு கருணனுடையது. பொதுக்கூட்டத்திற்கும் போகவேண்டும். குழந்தையையும் டாக்டரிடம் காட்ட வேண்டும், கையில் பணமும் இல்லை. யாரிடமேனும் கடன் வாங்கியாவது குழந்தையைக் காப்பாற்றவேண்டுமென்று அவன் தீர்மானித்தான்.

கருணன் யாரிடமும் இதற்குமுன் தன்வகைக்குக் கடனாகப் பணம் வாங்கியவன் அல்ல. ஒருவரிடம் சென்று கடன் வாங்குவதற்கும் அவன் உள்ளம் நாணம் கொண்டது வேறு வழியுமில்லை. கடன்பட்டே ஆகவேண்டியிருந்தது. தனது கலாசாலைத் தோழன் ஒருவனிடம் கொஞ்சம் ரூபாய் கடனாகப் பெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான், தொண்டர்கள் வீட்டின் முன் கூடி நின்றார்கள். கூட்டத்திற்குக் கருணனை அழைத்துப்போக அவர்கள் வந்திருந்தார்கள். பொழுதும் போய்க்கொண்டேயிருந்தது

தான் நின்று குழந்தைக்கு மருந்து வாங்கிக் கொடுக்க அவனுக்கு நேரமில்லை. ஒரு தொண்டனிடம் அந்தப் பொறுப்பை ஒப்புவித்துவிட்டு, அவன் கூட்டத்திற்கு தலைமை வகித்து அதை நடத்தச் சென்றுவிட்டான்.

அன்று தலைமை வகித்த கருணன் சிறப்பாக எதுவும் பேசவில்லை. அவனது உணர்ச்சி மிகுந்த சொற்பெருக்கைக் கேட்பதற்குப் பெரிய கூட்டம் கூடியிருந்தது. கருணனின் வழக்கத்திற்கு மாறான நிலையைக் கண்ட மக்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். சிங்கம்போல் கர்ஜனை புரியும் கருணன் ஏனின்று சோர்ந்து காணப்படுகிறார் என்று பலர் கூட்டத்திலேயே பேசிக்கொண்டார்கள்,

கருணன் உள்ளம் அன்று சரியான நிலையில் இல்லை. குழந்தையைப்பற்றிய நினைவு அவனை வேறு எதிலும் ஈடுபடச்செய்யவில்லை. கூட்டம் முடிந்ததும் நேராக வீடு வந்து சேர்ந்தான். தன்னைச் சுற்றியிருந்த தொண்டர்களிடம்கூட அவன் விடைபெற்றுக் கொண்டுவரவில்லை.

வீடு பூராவும் ஒரே கூக்குரலாக இருந்தது. குழந்தையின் உயிர் அப்போதுதான் போயிருந்தது. சுந்தரி குழந்தையின் மீது விழுந்து கதறியழுதுகொண்டிருந்தாள். பக்கத்து வீட்டுப்பெண்களும் அழுகையோடு அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

கருணன் வந்ததும் குழந்தையின் வெற்றுடலை அடக்கம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பலரின் உதவியால் குழந்தையின் உடல் அடக்கமும் செய்யப்பட்டது. வீடு பூராவும் சோகச் சாயல பரவியிருந்தது. கருணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் தலை கிறு கிறுவென்று சுழன்றது. தன் குடும்பத்தையே கவனிக்காத தேசியப் பணியின் காரணத்தாலேயே தனது குழந்தை இறந்தது என்பதை அவன் நன்றாக உணர்ந்தான். அவனுக்குக்

கொஞ்சம் சலிப்புத் தட்டிவிட்டது. இந்த மாதிரியான தேசப் பணிக்கு என்ன அவசியம் வந்தது என்றுகூட எண்ணினான்.

இவ்வளவு தூரம் நாட்டுப்பணியில் அவன் ஈடுபட்டும் பலர் அவனைக் குறையே கூறிவந்தார்கள். ஆகவே சலிப் புற்ற அவன், முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பிலிருந்தும், அரசாங்கத்தின் அட்டூழியத்திலிருந்தும் தன்னை விடுவித் துக்கொள்ளவும், தன் குடும்பத்தைப் பாதுகாத்துக்கொள் ளவும், தன் லட்சியத்தையே சிதைத்து விடலாமா என்று கூட எண்ணினான். இதே சமயம் தன் கூடவே கல்வி பயின்ற பலரின் உன்னத வாழ்வு அவன் மனக்கண்முன் காட்சி கொடுத்தது. அவர்கள் மலர்ந்த முகத்தோடும், அழகுப்பொலிவோடும் தன் மனைவி மக்களோடு சேர்ந்து எவ்வளவு குதூகலமாய் வாழ்ந்துவருகிறார்கள்!

அன்றிரவு அவன் உள்ளம் என்ற வானம் கருத்துக்கார் மேகச்சூல் கொண்டது. அங்கே கொடும் புயல். நிலையற்ற ஒளிமின்னல். இவற்றினிடையே அவன் குழந்தையின் ஆசை முகம் அடிக்கடி தோன்றித்தோன்றி மறைந்தது. இந்தக்கூத் திடையே சோர்வுகொண்ட அவன் கண்மூடி நினைவழிந்து உறங்கினான்.

*   *   *   *

காலையில் தொண்டர்கள் கதவைத் தட்டினார்கள். உரி மைப்போருக்காகத் தொண்டர்கள் அமைத்திருந்த பாச றைக்குக் கருணையையும் அழைத்துப் போகவே அவர்கள்

வந்திருந்தார்கள். துயிலினின்றும் கலைந்தெழுந்த கருணன் மனதில், தொண்டர்கள் அழைப்புக் குரலைக்கேட்டதும் புதிய உணர்ச்சி கிளர்ந்தெழுந்தது. அவன் இருண்ட உள்ளமென்னும் வானத்தில் அமைதியாகத் திடம் என்னும் குளிர்மதி உதித்து வந்தது. அந்த ஒளியின் மத்தியிலே அறிஞர் ஒருவரின்

“என் சொந்தத்திற்காக உயிருள்ள எதையும் நான் தீண்டமாட்டேன். ஆனால் தோழர்களுக்காக, இயக்கத்திற்காக, நான் எதையும் செய்யத் துணிவேன், நான் கொலையும் செய்வேன், என் சொந்த மகனைக்கூடக் கொன்று விடுவேன்.”

என்ற மொழிகள் தாரகைகள்போல் ஒளி வீசி மின்னின. கருணன் உள்ளச்சாந்தியுடன் அந்தத் தொண்டர்களின் பின்னால் முகாமை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.



## இரண்டு மண்டபங்கள்.

ஓர் இருண்ட குகையில் எட்டுப்பேர் அமர்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றனர். இவர்களில் ஒருவர் மிகக் கம்பீரமான தோற்றமுடையவர். பரந்த நெற்றியும், நீண்ட புருவமும், உயர்ந்து நீண்ட மூக்கும், அன்பு கனிந்த பார்வையும் உடைய இவரது முகம் இவரை ஓர் அரசரெனக் காட்டியது.

"எனது உண்மைத் தோழர்களாகிய உங்களுக்கு எனது எண்ணத்தை நிறைவேற்றும் சக்தியில்லையா? இனி எப்படி நான் எனது அரசை மறுபடி அடைய முடியும்? நான் எனது அரசை அடைவதற்கு முதல் அஸ்திவாரமாக இருக்கும் இதை முடிப்பதற்கே நீங்கள் இவ்வளவு யோசிப்பீர்களாயின்—சக்தியற்றிருப்பீர்களாயின் இன்னும் முடியவேண்டும் காரியங்களையெல்லாம் நீங்கள் எவ்வாறு முடிக்கப் போகிறீர்கள்?" என்று மனம் உடைந்து சொன்னார் அவர்.

இச்சொற்களைக் கேட்டதும் அந்த எழுவரிலும் அழகன்—இளைஞன் ஒருவன் உடனே அரசன் முன்னால் வந்து வணக்கம் செய்து, "அரசே! மனமுடைய வேண்டாம். தாங்கள் கலக்கம் கொள்வதற்கு அவசியம் இல்லை. இந்த

அரிய காரியத்தை நானே செய்து முடிக்கிறேன். இப்போது நான் என்ன செய்யவேண்டும்? எனது கடமை யாது" என உணர்ச்சியுடன் கேட்டான்.

மன்னரது முகம் மலர்ந்தது. இதைக் கேட்ட அவர் உள்ளத்திலே அளவு கடந்த மகிழ்வு பெருகியது. தமது வெற்றியின் அறிகுறி உதயமாயிற்றென எண்ணினர். அந்த இளைஞனை அவர் கூர்ந்து பார்த்து "இளங் காளையே! உனது ஆண்மையே ஆண்மை! நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். இன்று உனது கடமை மிகவும் பொறுப்புடையது. நீ இப்பொழுதே இம்மலையை விட்டிறங்கவேண்டும். இறங்கி, நமது முதன் மந்திரியின் இருப்பிடத்தை அடையவேண்டும். நமதுநாட்டின் சுதந்திரப் போரை நாளை இரவே தொடங்குதற்குரிய ஏற்பாடுகள் செய்ய அவரிடம் சொல்ல வேண்டியது. தலைமைத தளகர்த் தரும் அங்கேயே இருப்பதால் அவரையும் உடன் கூட்டிப் படைகளையெல்லாம் ஒன்று திரட்டி அணி வகுத்து நாளை நடு இரவில்நாதகிரியின் பின் புறத்தில் அடக்கமான ஓர் இடத்தில் வந்து தங்கச்சொல். நாளை இரவு முன்னேரத்தில் நாங்களும் அங்குவந்துசேர்கிறோம். நீங்கள வந்ததும் போர் தொடங்கவேண்டும். இதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் அவர்கள் முன்னதாகவே செய்து தயாராய் இருக்கவேண்டும். நாளை இரவு தவறினுல் இனி ஒருபொழுது வாய்ப்பது அரிது. ஆதலால் நீ இவற்றையெல்லாம் நமது முதன் மந்திரியிடம் விளக்கமாய்ச் சொல்லித் தவறுமல் காரியங்களை நடத்த ஏற்பாடு செய்யவேண்டியது. எனது

மனமார்ந்த ஆசியைத் தருகின்றேன். போய்வா'' எனக் கூறினார்.

–2–

மலையின் ஒற்றையடிப் பாதை. நடு இரவில் அப்பயங்கரமான பாதையிலே எங்கும் நிசப்தம். மிக உயரத்தினின்றும் கீழ் விழும் அருவியின் இனிய சலசலத்த ஒலி மிகத் தெளிவாகக் கேட்கின்றது. பாலொளி வீசும் நிலவு மரக்கிளைகளின் இடுக்கு வழியே மலையில் படுகிறது. அவ்வொளி படாத மரநிழலில் ஒதுங்கிச் செல்லும் சிறுத்தைப் புலிகள் தமது நடையால் தமது வலிமையைக் காட்டுகின்றன. அந்த ஒற்றையடிப் பாதையின் வழியாய் ஒரு துறவி வெகு வேகமாய்ச் சென்று கொண்டிருக்கிறார். அவர் வேறு யாருமில்லை. துறவி வேடம் பூண்ட குமார நம்பிதான்.

குமாரநம்பி மிக வேகமாய் நடந்து மலையின் அடிவாரத்தை அடைந்தான். அங்கிருந்தும் அந்நடு இரவுப் பொழுதிலேயே மந்திரியைக் காணச் சென்றான். மந்திரியிடம் சகல செய்திகளையும் விளக்கமாய்ச் சொன்னான். ஆனால் அவனுக்கு மந்திரியின் ஏவலால் மறுபடியும் மலைக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. குமார நம்பி அதற்கும் ஆயத்தமானான்.

அவனது மனதில் ஓர் எண்ணம் பிறந்தது. அவன் தனது இளங் காதலியைக் கண்டு அநேக நாட்கள் ஆயின. இவனுக்கு மணமான மூன்றாம் மாதத்திலேயே பகைவரது சேனைக்கு இவன் மன்னர் தோல்வியுற்றதும், இவனும்

இன்னும் சிலரும் அவரைத் தொடர்ந்து முற்கூறிய மலைக்குகையை அடைந்தார்கள். மாதங்கள் எட்டு கழிந்தன. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு நிமிஷமும், அவர்கள் தங்கள் தாய்நாட்டின் விடுதலைக்கும், வெற்றிக்கும் விடாமுயற்சியோடு உழைத்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் குமாரநம்பிக்கு அரசனை விட்டு எங்ஙனம் பிரியமுடியும்? தனது வீட்டைவிட்டுப் புறப்பட்ட காலத்திலுங் கூடக் குமாரநம்பி தனது காதலியிடம் ஒரு வார்த்தை பேசியவனல்லன்.

இப்போது அவனது இளங்காதலுள்ளம் தனது மோஹனக் காதலரசியைக் காண விரும்பியது. அவளைக் காணச் செல்வதினால் தனக்கு ஏதேனும் துன்பம் வந்தாலும் வரும் என்பதை அவன் நன்றாக அறிவான், ஏனென்றால் பகைவரது காவலைக் கடந்தே அவன் தனது நாட்டினுள் புகவேண்டும். ஆனால் அந்த வேளையில் அவன் மனது அந்த அரிய செய்கையைப் பெரியதாக எண்ணவில்லை. தனக்கு ஒரு சமயம் வந்தெய்தும் துன்பத்தையும் சிந்திக்கவில்லை. தனது காதலியைச் சந்திப்பதற்கு உறுதி செய்தான். ஆகவே, மிகவும் சாமர்த்தியமாகவும், தைரியமாகவும் தனது துறவிக் கோலத்தோடு குமாரநம்பி, உறங்கிக் கொண்டிருந்த காவலரைக் கடந்து, நாட்டினுள் புகுந்துவிட்டான்.

-3-

குமாரநம்பி விரைந்து நடந்தான். பல தெருக்களையும் சந்திகளையும் கடந்தான். கடைசியாக ஒரு வீட்டின்

பின் மதில் ஏறிக் குதித்து அவ்வீட்டு எல்லையினுள் புகுந்தான். வீட்டின் பின் வாசல் கதவை மெல்லத் தட்டினன். "அது யார்?" என்ற சப்தம் உள்ளேயிருந்து தழுதழுத்த குரலில் வெளிக்கிளம்பியது. "நான்தான் கதவைத் திற" என்ருன் குமாரநம்பி. வெளியில் நின்ற மனிதர் குரலின் அடையாளம் அறிந்ததும் கதவு திறக்கப்பட்டது. தங்கத்தில் கடைந்தெடுத்த பதுமை போன்ற அழகிய நங்கை ஒருத்தி வந்து நின்ருள். ஆனல் அவள் ஒரு நொடிப்பொழுது திடுக்கிட்டு விட்டாள். தனது நாயகன் என்று எண்ணிய இடத்தில் ஒரு துறவி நிற்பதைக் கண்டதே அவள் திடுக்கிட்டதற்குக் காரணமாகும். இதைக் கண்ட குமாரநம்பி, "கண்ணே! கல்யாணி! திகைக்காதே! நான்தான் மாறுவேடத்துடன் வந்திருக்கிறேன்." எனக் கூறி, துறவி வேடத்தை உடனே களைந்தான். திடீரெனத் தன்னைப் பிரிந்த கணவன்—தான் பல நாட்களாகக் எதிர்பார்த்திருந்த தன் மணவாளன்-தன் முன் நிற்பது அறிந்து அவள் உடல் பூரித்தாள். இருவரும் வீட்டினுள் சென்றனர். கதவு தாளிடாமல் வெறுமனே அடைக்கப்பட்டது. குமாரநம்பி தங்கள் தற்கால வாழ்வை அவளிடம் கூறிக் கொண்டிருந்தான்.

சிறிது பொழுது கழிந்தது. திடீரெனக் கதவைத் திறந்துகொண்டு வெளியிலிருந்து குமாரநம்பியின் வீட்டிற்குள் ஐந்தாறுபேர் புகுந்தார்கள். உள்ளிருந்த குமாரநம்பியும் அவன் மனைவி கல்யாணியும் பதட்டம் கொண்டனர். பகை மன்னனின் சேனையாட்கள் என்பதை நிமிஷத்தில் அறிந்துகொண்டான் குமாரநம்பி. இவர்கள் எப்

படிதான்வந்ததை அறிந்தார்கள் என்று யோசித்தான். தனது இடுப்பைச் சோதித்துப் பார்த்தான். அங்கு சொருகி வைத்திருந்த மந்திரி தந்த கடிதத்தைக் காண வில்லை. அதுவே பகையரசன் சேனையாட்களிடம் தன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது, என்பதை எளிதில் உணர்ந்தான் நம்பி. இதே சமயத்தில் நம்பியின் கையை ஒரு தடியன் பலமாகப் பிடித்துக் கொண்டு, "வீர மார்த்தாண்டனின் அந்தரங்கப் பணியாளன் நீதானா"? என வினவினான். மறைக்க இயலாத குமாரநம்பி "ஆம்" எனப்பதிலளித்தான்.

"இந்தக் கடிதத்தை இங்கு தந்தவர் யார்? உனது மன்னன் மலையில் ஒளித்திருப்பதாகக் கடிதம் சொல்லுகிறதே. அந்த மலை எது? விரைவில் சொல்" என்று மறுபடியும் வீரகேரளனின் உதவிச் சேனாதிபதியாகிய அந்தத் தடியன் கேட்டான்.

நம்பி பதில் கூறவில்லை. என்ன ஆயினும் நாட்டின் இரகசியங்களை வெளியிடக் கூடாது. மன்னனைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என அந்த நெருக்கடியான சமயத்திலும் கூட அவன் நெஞ்சு அவனுக்கு நினைப்பூட்டியது. "சொல்ல முடியாது" என ஆண்மையுடன் பதில் கொடுத்தான். நம்பியின் தீரமான மொழியைக் கேட்ட சேனாதிபதி "நீ சொன்னால் பிழைத்தாய்; இல்லாவிட்டால் இதோ இருக்கும் எனது வாளுக்கு முதலில் உன் மனைவியை இரையாக்குவேன். அதன்பின் நீ இரையாவாய் இது உறுதி, ஆதலால் யோசித்துப் பதில் கூறு" என்றான்.

என்ன செய்வான் குமாரநம்பி! அவனைச் சூழ்ந்து நான்குபேர் மிகப் பலமாகக் காவல் செய்து நிற்கின்றார்கள். அடுத்த பக்கம் அவனது இளங்காதலி கல்யாணி துவண்டு கசங்கிய கொடியைப் போல் வாடி வதங்கி பிரமிப்புக் கொண்டு நிற்கின்றாள். முதலில் அவள் உயிர் ஒரு பக்கம் ஊசலாடுகிறது. ஒரு பக்கம் தனது நாட்டின் உயிர் ஊசலாடுகின்றது. ஐயோ! மிகச் சங்கடமான நிலை! உள்ளம் வெந்தழிகிறது. நம்பி பெருமூச்சு விட்டவண்ணம் நன்கு யோசித்தான். தனது காதலியும் தானும் மடிவதில் தங்கள் இருவருக்கே சேதம். தனது மன்னர் இறப்பதால் தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் சேதம். நாடும் பகைவர்களுக்குச் சாசுவதமாய் அடிமைப்பட்டுவிடும். இதை எண்ணிப் பார்த்ததும் அந்த வீரசிங்கம் தங்கள் உயிரை நாட்டிற்காகப் பலியிட எண்ணினான். தனது காதலியை நோக்கினான். அவள் காதற் கண்கள் தன்னை மிகப் பரிவோடு நோக்குவதைக் கண்டான். அவன் தத்தளிப்புற்றான். அதே சமயத்தில் கல்யாணியின் வாயினின்றும், "நாதா, கலங்கவேண்டாம். எந்தத் தீவினையும் கொடுந்துன்பமும் நம்மை அசைக்காது, தாய் நாட்டை மறக்கவேண்டாம். என்ற மொழிகள் வெளிக் கிளம்பின. இம்மொழியைக் கேட்டதும், "என்ன சொல்லுகிறாய்?" என்று அத்தடியன் பின்னும் அதட்டிக் கேட்டான், குமாரநம்பியை.

அதே நேரம் அவ்வீரன், "என் அரசனின் இருப்பிடத்தை நான் சொல்லவே மாட்டேன்." என ஆண்மையுடன் பதில் கூறினான்.

"உனக்கு என்னடா அவ்வளவு துணிவு, இதோ பார்!" எனக் கூறியவண்ணம் அச்சண்டாளன் தனது பக்கத்தில் நின்றவனுக்குச் சைகை காட்டினான். அத்துரோகி, கொடிய நெஞ்சன், இரக்கமென்பதே இல்லாத படுபாவி ஒரே வெட்டாய் கல்யாணியை வெட்டி விட்டான். ஆவென அலறினான் நம்பி, அவனுக்கு இவ்வுலகமே இருள் மயமாகத் தோன்றியது. மூர்ச்சித்து சாய்ந்துவிட்டான். எங்கும் இரத்த வெள்ளம். தாய் நாட்டிற்காக கல்யாணியின் உயிர் தியாகம் செய்யப்பெற்றது.

-4-

பகை மன்னனான வீரகேரளனின் முன் குமார நம்பி விலங்கிடப்பட்டுக் கொண்டு நிறுத்தப்பட்டான். கொடுமையே உருவாய் இருந்த அம்மன்னவன் நம்பியை நோக்கி, "அடே! உனது உயிரை இழக்கிறாயா? இன்றேல் உனது மன்னனின் இருப்பிடத்தைச் சொலகிறாயா?" என்று மிகக் கோபமாய்க் கேட்டான். நமபிக்குத் தனது காதலி வெட்டுண்டது கனவுபோல் தோன்றியது. அவனது உள்ளம் துடி துடித்தது. இனி இவ்வுலகில் தனக்கு என்ன வாழ்க்கை என எண்ணினான். வீரகேரளனை நோக்கி, "கொடியவனே! துரோகி! நீயும் ஒரு அரசனா? அன்புறையும் நெஞ்சம் படைத்தவனல்லவா அரசன்? மக்கள் நலத்தை பாதுகாப்பவன் அல்லவா மன்னவன்? மன்னுயிரையும் தன்னுயிராகப் பாதுகாத்து நீதி முறை தவறாது குடிமை வாழ்வை உயர்த்துபவனல்லவா கொற்றவன்? கொலைபாதகனே! குற்றமற்ற எனது காதலியை கொடிய உனது கால

தூதர்கள் கொன்றார்கள் நீ எங்கள் நாட்டு மக்களின் உயிரைப் பிழிந்து சாறெடுக்கிறாய்! உனக்கு சாவு அடுத்து விட்டது. ஏழையின் கண்ணீரும்" கதறலும், இதயத் துடிப்பும் வீண்போகா. என தன் வாயில் வந்தனவெல்லாம் மடமடவெனச் சொல்லித் தள்ளினான்.

இரக்கமென்பதைச் சிறிதும் அறியாத அக்கொடிய மன்னவன் நம்பியைத் தூக்கிலிட உத்தரவு கொடுத்தான். நம்பி நாட்டிற்கே பிறந்தான். நாட்டிற்கே வளர்ந்தான். நாட்டிற்கே உழைத்தான். நாட்டிற்கே உயிர் நீத்தான். அவனது புனிதமான உயிர் அவனது அன்புக் காதலி கல்யாணியின் உயிரோடு சென்று கூடியது.

பின்னாளில் வீரமார்த்தாண்டனின் பெருஞ் சேனையால் வீரகேரளன் தோல்வியுற்றான். கேரளன் தன் உயிருக்கு எங்கு ஆபத்து வந்துவிடுமோவெனப் பயந்து எங்கேயோ சென்று மறைந்துகொண்டான். மார்த்தாண்டன் நாட்டினுள் புகுந்ததும் குடிமக்கள் எல்லோரும் மிகக்களிப்பு கொண்டனர். தமது உயிரைக் காத்த குமார நம்பியையும் கல்யாணியையும் நினைத்து மன்னர் ஆறாய்க் கண்ணீர் பெருக்கினர். தாம் வணங்கும் முதல் தெய்வம் தமக்காக உயிர் கொடுத்த அவ்விருவருமே என எண்ணிய மார்த்தாண்டன் அவர்களுக்கு இருமண்டபங்கள் கட்டினார். அங்கே நம்பியின் உருவத்தையும் கல்யாணியின் உருவத்தையும் கல்லில் செதுக்கச் செய்து நிலை நாட்டி நினைவுக்குறி அமைத்தார். என்னே தாய் நாட்டிற்கு உயிர் கொடுத்தார் பெருமை!

# அவன் திருடனு?

தெருவில் அந்த இரண்டு குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருந்தன. இரண்டுக்கும் ஒரே வயது. உலகத்தில் உள்ள இன்னல் வாழ்க்கையில் ஏற்படும் சாயல் இன்னும் அவைகளின் உள்ளங்களில் படியவில்லை. ஆடம்பரத்தாலும், செல்வச் செழிப்பாலும் ஏற்படும் உயர்வு தாழ்வுகளை அந்த இரண்டு ஜீவன்களும் இதுவரையிலும் உணரவில்லை. உணர்ந்திருந்தால் பொருளாதார நிலையில் வாழ்க்கையில் வித்தியாசம் ஏற்பட்டிருக்கும் அவைகளுக்குள் எப்படி ஒற்றுமை உண்டாகியிருக்கும்? இவை இரண்டும் ஒற்றுமையின் இணைப்பால் பிளளைப் பிராயத்தின் மோஹன விளையாடலில் லயித்திருந்தன. ஆனந்தமான துள்ளல்; சந்தோஷமான ஓட்டம்; குதிப்பு; காலை இளம்பரிதியின் பொன்கதிர்கள் அவைகளின் மேனிகளை வருடிக்கொண்டு தமக்கோர் புதிய மகத்துவத்தைத் தேடிக்கொண்டன.

ஒன்று ஒரு பணக்கார வீட்டுக் குழந்தை; மற்றொன்று பக்கத்து வீட்டில் வாழ்ந்துவரும் நாராயணன் என்ற ஒரு வர்த்தகக் குமஸ்தாவின் குழந்தை. மோட்டார் வண்டிகளின் ஓட்டமில்லாத அந்தக் கிராமத்தின் தெருவில் அவைகள் இரண்டும் அச்சமற்று ஒன்ருக விளையாடிக் கொண்டதில்

ஆச்சரியம் எதுவும் இல்லை. அவைகள் உள்ளங்களிலும் திகிலற்ற தன்மை பரவியிருந்தது.

நாராயணன் தன்வீட்டு முன்வாசல் பக்கம் நின்று கொண்டு மற்றக் குழந்தையோடு தன் குழந்தை விளையாடும் குதூகலத்தைப் பார்த்துக் கொண்டே நின்றான். அவன் உள்ளத்தில் அப்போது திடீரெனத் துக்கம் பொங்கியது. அவன் இதயத் துக்கக் கொப்புளம் உடைந்து நீராக மாறியதுபோல் அவனது விழிகள் மலமலவென்று கண்ணீரை உதிர்த்தன. அந்தப் பணக்காரவீட்டுக் குழந்தையின் மீது ஆபரணங்கள் அதிகமாகக் கிடந்தன. பட்டுச் சட்டை அதற்கு அணியப்பட்டிருந்தது. தனது குழந்தைக்கு நகைகள் எதுவும் கிடையாது. அதைப் பற்றியும் அவனுக்குக் கவலையில்லை ஆனல் அதற்கொரு சட்டை தைத்துக் கொடுக்க முடியவில்லையே என்ற துக்கம்தான் அவன் உள்ளத்தைச் சென்று தாக்கியது. தனது இல்லாமையைச் சபித்தான். அக் குழந்தை தன் வீட்டில் ஏன் பிறந்தது என்று புலம்பினன். இது என்ன வாழ்வு என்று தனது வாழ்க்கை நிலையை வெறுத்தான்.

இதே சமயம் அவன் மனைவி செண்பகம் தனது குழந்தையைத் தேடிக்கொண்டு வெளியே வந்தாள். குழந்தைகள் இரண்டும் தெருவில் விளையாடிக் கொண்டிருப்பதையும், தனது கணவன் அவைகளிடம் தனது கருத்தைப் புதையவிட்டிருப்பதையும் அவள் உணர்ந்து கொண்டாள். தாய்மையன்பு கனிந்த உள்ளம்பெற்ற அவள் தனது குழந்தைக்கும், பணக்காரவீட்டுக் குழந்தைக்கும் வெளியுலகில் ஏற்பட்டி

ருக்கும் வேற்றுமையைக் காணச் சகியாதவள் போல் தனது குழந்தையை எடுத்துக் கொண்டாள். அதே சமயம் இணை பிரிந்த அந்தச் செல்வக் குழந்தையும் விறுவிறு என்று ஓடித் தன் வீட்டிற்குள் புகுந்து கொண்டது.

"நம்ம கண்ணு ராமுவுக்கு ஒரு சட்டை தைத்துக் கொடுக்க நான் உங்களிடம் எத்தனை நாட்கள் சொன்னேன். அந்த எண்ணம் உங்களுக்கு இருந்தால்தானே, நானும் உங்களிடம் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டேன்" என்று செண்பகம் தனது கணவனைப் பார்த்துச் சொன்னாள்.

இதற்கு நாராயணனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. ஏற்கனவே நொந்திருந்த அவன் உள்ளத்தில் இந்த வார்த்தைகள் பாராங்கல் போன்று சென்று தாக்கின. செண்பகத்தின்மீது அவனுக்கு எள்ளளவும் வருத்தம் கிடையாது. அவள் ஒருகடவை இன்னும் இப்படிச் சொல்வாளானால் அவனுக்கு அழுகையே வந்துவிடும். தனது நிலைமைக்கு அவன் வருந்தினான்.

கணவன் நிலைமையை செண்பகம் உணராதவள் அல்ல. ஆனால் மற்றக் குழந்தைகள் அணிந்திருக்கும் அழகு அணிகளைப் பார்க்கும் வேளை, தனது குழந்தைக்கும் அதுபோல் அணிய முடியாத நிலைமையிலுள்ள தங்கள் பொருளாதார நிலைமையை எண்ணும்போதுதான் அவள் இதயம் நைந்துவிடுகிறது, வரட்டு வாழ்க்கையின் ஏக்கம் அவள் நிலைமையைக் குலைத்துவிடுகின்றது. அவ்வளவுதான்!

* * * * *

நாராயணன் ஒரு முதலியார் ஜவுளிக்கடையில் குமஸ்தாவாக இருந்தான். மாதம் இருபது ரூபாய் சம்பளம்.

அந்தக் கடைச்குப்போய் ஒன்பது வருடம் பூர்த்தியாகி பத்தாவது வருடத்தின் ஆரம்பம். பத்து ரூபாயிலிருந்து படிப்படியாகக் கூட்டப்பட்டு இருபது ரூபாய் வரையில் சம்பளம் வந்து நிற்கின்றது. அவனுக்கு ஒரு நாள் செலவு நடத்த ஒன்றரை ரூபாய் வேண்டும். அவன் என்ன செய்வான்?

முதலாளியோ மிகவும் மூர்க்கம் உடைவர். இம்மிக் காசுகூடச் சம்பளத்தைத் தவிர அதிகம் கொடுக்கமாட்டார். சில்லரையாக ஏதாவது பற்றியிருந்தால் மாதக் கடைசியில் அதுபோகத்தான் மீதச் சம்பளம் கொடுப்பார். சில நாட்க ளில் இரவு ஒரு மணி வரையில் கடையில் வேலை இருக்கும். கடைக்கும் நாராயணன் வீட்டுக்கும் ஒரு மைல் தூரம் உண்டு. வீட்டுக்குச் சென்று சாப்பிட நேரம் இருக்காது. ஹோட்டலில்தான் சாப்பிடவேண்டும். ஆனால் அந்தச் செலவு நாரயணனின் சொந்தப் பொறுப்புதான்.

கடைக்கணக்குப் புத்தகத்தில் அவன் சம்பளம் மாதம் ஐப்பது ரூபாய் என்று செலவெழுதப்பட்டு வந்தது. வரு மான வரி அதிகாரிகளிடம் கணக்குப் பரிசோதனைக்குப் போகும்போது நாராயணனுக்கு ஆண்டுக்கு ஐநூறு ரூபாய் லாபக்கொடை கொடுத்ததாக கணக்கு இருக்கும். அதைப் பெற்றுக் கொண்டதாக அவனிடமிருந்து கையெழுத்தும் வாங்கப்பட்டிருக்கும். ஆனல் அதில் அவனுக்கு ஒரு சல்லிக் காசுகூடக் கொடுக்கப்படுவதில்லை. இந்த அநியாயத்தையும், கொடூரச் செய்கைகளையும், கண்டு துடிதுடித்தான் நாரா யணன். இந்த நீச முதலாளியிடம் வேலை பார்க்காவிட்டால்

தான் என்ன? இதைவிடப் பட்டினி கிடந்து சாகலாமே என்று பல சமயம் அவன் மனதிற்குத் தோன்றும். தனது இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்துப் பணம் முதலாளிக்குச் சேர்த்துக் கொடுக்கும் தொழிலாளிக்குக் கடைசியில் பட்டினியும், பஞ்சமும்தானு பிரதிபலம்? ஏச்சும், வெறுப்பும்தானு அவனுக்குக் கிடைக்கும் நன்கொடைகள்?

தொழிலாளி அழியும் அதே மண்ணில்தான் இந்த முதலாளியும் புதைக்கப்படுகின்றுன். அந்த மண் இருவர் உடலுக்கும் பாரபட்சம் காட்டாது ஒரே நிலையில் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்கிறது. முதலாளியின் செல்வமும், அவன் கொள்ளைச் சம்பாத்தியமும் மரணத்தின் போது அவன்கூடப் போவதே இல்லை. அவனோடு அவனவன் கொடூரச் செயல்களே புதைக்கப்படுகின்றன. ஆனுல் வாழ்வில் சம்பாதிக்கும் அன்பு, கருணை, பிறர்க்குதவி, பொறுமை, உண்மை முதலியவை அதைப்போல் என்றும் அழிவதில்லை. நிலையாய் உலகத்தில் இடம்பெறும். இதைத் திமிர்தண்டம் பேசும் முதலாளி உலகம் அறியுமா?

கடையை விட்டு மாறினுல் வேறு இடத்தில் வேலை கிடைப்பது கஷ்டம் என்பதை நாராயணன் நன்ருக அறிவான். ஆகவே அவன் கடையை விட்டு மாருது செக்குமாடுபோல் உழைக்கும் உழைப்பால் வற்றவைக்கப்படும் தனது இரத்தத்தை முதலாளியின் சம்பாத்தியக் குவியலுக்கு அர்ப்பணித்து வந்தான்.

நாராயணனுக்கு நாளுக்குநாள் முதலாளியிடம் அதிக வெறுப்பு ஏற்பட்டு வந்தது. வாழ்வில் தினந்தோறும்

அவன் அனுபவித்து வந்த துன்பமும்; எரிச்சலும், அவனை ஒழுங்கீனனாக நடக்கத் தூண்டின. இவ்வளவு காலமும் நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்து வந்தான். இப்போது அதற்கு மாறாக நடக்கவா?

மனதிற்குள் பயங்கரமான போராட்டம், வாழ்வுக்காக இந்த இழிவான போக்கா? என்று ஒரு சமயம் எண்ணுவான்; மற்றொரு சமயம் இந்த முதலாளியே ஒரு பயங்கரக் கொள்ளைக்காரர்தானே; ஏழை மக்களிடமிருந்து பிடித்துப் பறித்த முறையில்தானே பணம் சேர்த்து வருகிறார்! இவரிடம் நியாயமான சிந்தையும், தாராள மனப்பான்மையும், கருணை நெறியும் இல்லையே. இவரிடமிருந்து களவு செய்தால் என்ன? அது பழியாகுமா? என்று சிந்திப்பான். கடைசியாக முதலாளியின் முதலைக் களவு செய்வதில் குற்றமில்லை என்று அவனுக்குப்பட்டது. அது உண்மையாகக் களவல்ல என்று எண்ணினான். தனது உழைப்பிற்குரிய பயனை வேறொரு வழியில் பெறுவதாக அவன் தனது மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.

*    *    *    *

மற்றக் குழந்தைகளின் வாழ்க்கை நிலையிலிருந்து தனது குழந்தை நிலை எவ்வளவோ தூரம் கீழ்ப்பட்டது என்பதை இரண்டு குழந்தைகளும் விளையாடிக்கொண்டிருந்த அன்றுதான் நாராயணன் உணர்ந்தான். அதோடு அவன் மனைவி செண்பகத்தின் வாசகமும் முதலாளி

கடையில் களவு செய்வதற்கு அவனுக்குக் கொஞ்சம் திடத்தைக் கொடுத்தது.

மத்தியான உணவுக்கு வீட்டுக்குப் போகும் சமயம் வந்தது. நாராயணன் கடையின் உள்ளறையில் சென்றான். உயர்ந்த துணியில் இரண்டு கெஜம் கிழித்து அடி முந்தியில் வைத்துக் கட்டிக்கொண்டான். இதை அறையின் உள்ளே வருவதற்கு கால் எடுத்து வைத்த முதலாளி கண்டு கொண்டார். இதைக் கண்டும் காணாத பாவனையில் அவர் மெதுவாக வெளியில் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். முதலாளி தனது செய்கையைக் கவனித்துக் கொண்டதை நாராயணன் அறியவில்லை. பதிவுபோல் அவர் முன்னிலையில் வந்து "நான் சாப் பாட்டுக்குப் போகிறேன்" என்று விடை கேட்டான்.

அதே சமயம் நாராயணன் சென்னியில் ஓங்கி ஒரு அடி முதலாளி கொடுத்து விட்டு"

"சண்டாளா, என் குடியைக் கெடுத்த பாவி, எத்தனை நாட்களாக இப்படி என் முதலையெல்லாம் கொள்ளை போட் டாய்." என்று கூக்குரலிட்டார்.

இந்தச் சத்தத்தைக் கேட்டுப் பக்கத்துக் கடையில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். முத லியார் இந்தச் சமயம் நாராயணன் முந்தியிலிருந்து துணியை இழுத்தெடுத்து அதை யாவரிடமும் காட்டிப் பின்னும் அவனை உதைக்கத் தொடங்கினார். பார்க்க வந்த வர்கள் எல்லோரும் அவன் உடலைப் பதம் பார்க்க ஆரம்

பித்து விட்டார்கள். கடைசியாக அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கும் இழுத்துச் செல்லப்பட்டான்.

ஒன்பது வருடம் நம்மிடம் வேலை பார்த்தவன் அல்லவா? இவனிடம் ஏதோ தவறு நிகழ்ந்து விட்டது. இதை அடக்கமாய் மன்னித்து அவனைக் காப்பாற்ற வேண்டியது தனது பொறுப்பல்லவா? மேலும் இக்களவுக்குத் தானல்லவா காரணம்? என்ற இரக்க எண்ணங்கள் அவரது உள்ளத்தில் சுரக்கவில்லை. மேலும் அங்கே வந்த போலீஸ் புலிகளிடம் இவர்

"பயலை உரித்து விடுங்கள். சண்டாளத் துரோகி, இதற்கு முன் எவ்வளவு காலமாக எனது கடையைக் கொள்ளை போட்டிருக்கிறான் என்பது உங்கள் உதையிலேதான் வெளி வரவேண்டும்" என்று உத்தரவு போட்டார். பக்கத்தில் நின்ற போலீஸ் எட்டிடம் இருபது ரூபாய் இரகசியமாய்க் கொடுக்கப்பட்டது.

போலீஸ் சேவகர்கள் நாராயணன் கையில் விலங்கு பூட்டித் தெரு வழியே இழுத்துச் சென்றார்கள். இடைக்கிடையே அவனுக்கு அவர்களால் இடியும் உதையும் கொடுக்கப்பட்டு வந்தன. பலர் இவர்களைத் தொடர்ந்து வந்தார்கள். சிலர் நாராயணன் "களவு செய்வானா? அவன் யோக்கியனல்லவா?" என்று அவனுக்காகப் பச்சாத்தாபம் பட்டார்கள். இன்னுஞ் சிலர் "இவனா களவு செய்தான்! எவ்வளவு நம்பிக்கையாக முதலியார் இவனைக் கடையில் வைத்திருந்தார்! இனி உலகில் யாரை ஐயா நம்பமுடியும்?" என்று சொன்னார்கள்.

நாராயணன் வீட்டுவாசலைத் தாண்டித்தான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். அவனது மனைவி செண்பகம் தனது நாயகன் இன்னும் சாப்பிட வரவில்லையே என வாசலில் அவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றாள். அப்போதுதான் தெருவில் வரும் இக்கூட்டம் அவள் கண்ணில்பட்டது. வேடிக்கையை அனுபவிக்கும் முறையில் 'இது என்ன கூட்டம்?' என்பதை அறிய அவள் உள்ளம் அதிக ஆர்வம் கொண்டது. கூட்டம் அவள் பக்கத்தில் வந்துவிட்டது. கூட்டத்தின் மத்தியில் அவள் தனது கணவனின் பரிதாபக் கோலத்தையும், அவன் வாயிலிருந்து இரத்தம் வடிவதையும் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஓவென்று கதறி வீழ்ந்து மூர்ச்சையானாள். இதைக் கண்ட நாராயணனுக்கும் துயிலில்தான்ஏதோ கனவு காண்பது போல் இருந்தது. இரண்டு மூன்று போலீஸ் சேவகர்கள் அவன் வீட்டில் புகுந்து சோதனை போட்டார்கள். கூடிநின்ற போலீஸ் ஜவான்களில் இன்னும் சிலர் இவனுக்கு உதை கொடுத்து இவனை முன்னே தள்ளிச் சென்றார்கள். உணர்வு மயங்கிய அந்த நிலையிலும் அவன் வாயிலிருந்து

"நான் திருடனா?"

என்ற தொனி அடுத்தவர்கள் காதில் கேளாதவண்ணம் ஒலித்துக்கொண்டிருந்தது. உண்மையாகவே அவன் திருடனா?

## அவள்.

அவள் ஓர் ஆசிரியை. தனது வேலையை அவள் எவ்வளவோ ஒழுங்காகச் செய்து வந்தாள். குழந்தைகளுக்கு அவளிடம் அலாதியான பற்று. பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது மிட்டாய் வாங்கிச் செல்வாள். பிள்ளைகளுக்கெல்லாம் பங்கு வைத்துக்கொடுப்பாள். அவர்கள் தின்பதைக்காண அவளுக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! குழந்தைகளின் ஆனந்த நடனங்களையும், குளிரும் மழலைச் சொற்களையும் கேட்டு அவள் வெறிகொண்டுவிடுவாள்.

அவள் அழகி. கவிஞர்கள் காவியத்தில் பெண்களின் அங்கங்களை அழகாகச் சித்திரித்துப் பாடுகின்றார்கள். ஓவியப் புலவர்கள் தங்கள் கலைச்சித்திரங்களில் பெண்களின் அபூர்வச் சௌந்தர்யத்தை வரைந்து காட்டுகின்றார்கள். ஆனால் அவள் இவர்களின் பிடிகளில் நிற்கமாட்டாள் என்பதை நன்றாகச் சொல்லலாம். நிலவு எவ்வளவோ குளிர்ச்சியாக இருக்கிறது. இதற்கும் எவ்வளவோ மேலான குளிர்ச்சியும், கவர்ச்சியும் அவள் முக விலாசத்தில் பரவியிருந்தன. வசந்த கால ரோஜாவைவிட அவள் அதிக மென்மையாக இருந்தாள். அவள் பேசும்போது தேனின் சுவையைவிட அதிகமான

இனிமை அவள் மொழிகளில் கலந்திருந்தது. மின்னலின் துடிப்பு, கூர்மை, ஒளி இவை அவள் பேச்சில் பிரதிபலித்தன. வான வெளியில்-நட்சத்திரப் பூங்காட்டில் உலவித் திரியும் கற்பனைப் பெண்ணாக அவள் காட்சி கொடுத்தாள்.

அவளுக்கும் எனக்கும் எப்பொழுதோ ஒரு தடவை சந்திப்பு ஏற்பட்டது. அந்தச் சமயம்கூட எனக்கு நன்றாக நினைவில்லை. ஆனால் சந்திப்பு ஏற்பட்டதின் காரணம் மட்டும் நன்றாக நினைவிருக்கிறது. குழந்தைகள் பாடுவதற்கு ஓர் இசைப்பாடல் வேண்டுமென்று எனக்குத் தெரிந்த பெரியார் ஒருவரையும் சிபார்சைக்கு அழைத்துக்கொண்டு ஒரு சமயம் என்னிடம் வந்திருந்தாள். அத்தகைய ஓர் அழகி-காட்டு மல்லிகைபோன்ற ஓர் இளம்பெண் என்னை ஓர் கவிஞனாக மதித்துப் பாடல் கேட்டாளென்றால் எனக்கு எப்படியிருக்கும்? பாடித் தருவதாக ஒப்புக்கொண்டு மறுதினம் அவர்களை வரச் சொல்லியிருந்தேன். அன்று அவள் தனிமையாகவே வந்தாள். பாடலைக் கொடுத்தேன். அதைப் படித்துப் பார்த்து விட்டு அவள் பெருமிதம் கொண்டாள். மனதின் மகிழ்ச்சியால் மலர்ந்த அவள் முகம் அதை எனக்குத் தெளிவாகக் காட்டியது. உணர்ச்சியின் உயர்ந்த எல்லைக் கோட்டில் நின்று அவள் என்னைப் பார்த்து 'பாடல் நன்றாக இருக்கிறது' என்று சொன்னாள். என் உடல் பூராவும் ஒருவித இன்ப உணர்ச்சி. இதை விடவும் வேறு என்ன பெருமை எனக்கு வேண்டும்? எழுத்தாளர்களுக்கு அடுத்தவர்கள் அவர்கள் பென் முனையைப்பற்றி வியந்து பாராட்டும்போது அதில் பிறக்கும் ஆனந்தம் வேறு எதில்

தான் பிறக்கும்? அதிலும் ஒரு சுந்தரி என் பாடல்களில் சொக்கி என்னைப் பாராட்டினுளென்ருல் அது எளிதில் நடக்கும் ஒரு காரியமா? என்னை அறியாத ஒரு சக்தியும் மிடுக்கும் என்னை வந்து சேர்ந்தன.

அந்தப் பாடல் என்னிதயத்தின் உணர்ச்சியில் உருவான பாடல்தான். உண்மையிலேயே ஒவ்வொரு எழுத்திலும் உணர்ச்சியின் துடிதுடிப்பிருந்தது. அதில் அவள் இதயம் எவ்வளவு புதைந்திருந்ததோ நானறியேன். ஆனுல் அன்று முதல் அவள் என்னை அடிக்கடிச் சந்திக்கும் வழக்கத்தை வைத்துக்கொண்டாள். குழந்தைகளுக்கு வேண்டிய பாடல்களை எழுதி வாங்கிச் செல்வாள். எனக்கு அவளிடம், இருப்புக்குக் காந்தத்தில் உள்ள உறவு இருந்தது. நாங்கள் அறியாத ஓர் புனித ஐக்கியம் எங்கள் இருவரையும் ஒன்ருக்கியது.

ஒரு நாள் அவளோடு அவள் தம்பியும் வந்திருந்தான். அவள் முகத்தை அவனுக்கு அச்சில் வார்த்துத்தான் வைத்திருந்தது! அந்தச் சிறுவன் கருணை நிறைந்த விழியால் என்னைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். நானும் அவளும் பேசிய சம்பாஷணைகளையும், வேடிக்கைப் பேச்சுகளையும் கேட்டு அவன் என்ன மனதில் நினைத்தானே நானறியேன். எங்களுக்குள் நடந்த பேச்சுகளில் வெட்கப்பட்டவன் போல் அவன் ஒரு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டான். ஆனுல் எங்கள் பேச்சு அவனுக்கு வெறுப்பைக் கொடுக்கவில்லை என்பதை நான் நன்ருக யூகித்துக்கொண்டேன். நாங்கள் இன்னும் கொஞ்சம் சந்தோஷமாகப் பேச

ஒருவேளை அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தானோ என்னவோ? எங்களுக்குள்ள உறவை அவள் தன் தம்பியிடம் என்ன முறையில் சொல்லியிருந்தாளோ அதுவும் எனக்குத் தெரியாது.

அன்று முதல் அவனும் என்னுடன் பழகிக்கொண்டான். எனக்கு மரியாதை காட்டினுன். சில சமயங்களில் கௌரவமாகப் பரிகாச வார்த்தைகளினுல் என் மகிழ்ச்சியைத் தூண்டிவிடுவான்.

*   *   *   *   *

நான் அவளை மணஞ் செய்துகொள்ள நிச்சயித்துக் கொண்டேன். அவளும் தனது பூர்ண சம்மதத்தைத் தெரிவித்துக்கொண்டாள். ஜாதியும், மதமும் இதற்கு எதிராக நிற்கும் என்பதை நானறிவேன். சமூகத்தாலும், உறவினராலும் இதற்கு மறுப்பு ஏற்படும் என்பதையும் உணர்ந்திருந்தேன். நான் இவைகளை வகைவைத்துக்கொள்ளவில்லை. இவைகளை விலக்கி ஒழிப்பதற்குள்ள துணிவு எனக்கு ஏற்பட்டிருந்தது. மன ஐக்கியம் புனிதத்தை வளர்க்கின் அதைத் தடுக்க உலகத்தின் எந்த சக்திக்கும் வலுவில்லை என்பது என் அபிப்பிராயம். அதற்கு அடங்கி ஒடுங்குபவன் ஒரு வீரனுகான். நேர்மைபெற்ற ஒரு மனிதனுகான் என்பது என் சித்தாந்தம்.

நான் ஓர் கவிஞன். அவள் ஓர் ஆசிரியை. நாங்களிருவரும் ஒன்ருனுல் எங்கள் வாழ்க்கை எப்படியிருக்கும்? கலை வாழ்க்கையாகவல்லவா இருக்கும் என்பதைக் கற்பனை

செய்துகொண்டேன். என் கவிதைகளை அவளிடம் அடிக்கடிப் பாடிக்காட்டலாம். அதனால் அவள் இதய கமலத்தை மலரவைக்கலாம். அவளும் என்னைப் பாராட்டுவாள்; தனது கவிதாரசனையை என்னிடம் தெரிவித்துக்கொள்வாள்; அதைப்பற்றி விமர்சிப்பாள். இதில் பொழுது எவ்வளவு இன்பமாகக் கழியும்? இலக்கியப் பிரியர் இருவர் ஒன்றாகச் சேர்ந்துவிட்டால் அவர்கள் மனம் சடையாமல் இலக்கியத்தைப்பற்றி விமர்சிப்பார்கள். தங்கள் கருத்துகளை வெளியிட்டு மாற்றுப் பார்ப்பார்கள். இதில் அவர்களுக்குச் சடைவே இருக்காது. எங்களிருவருக்கும் இந்த நிலை ஏற்பட்டால்......

* * * *

உலகத்தில் நாம் எண்ணியிருப்பதற்கு விபரீதமாக எவ்வளவோ காரியங்கள் சம்பவித்துவிடுகின்றன. இயற்கையாலும், மன மாற்றத்தாலும் இவை ஏற்பட்டுவிடும். இது நமது தளராத உறுதியை அழித்துவிடும். லட்சியத்தைச் சிதைத்துவிட முயற்சிக்கும். இந்தச் சோதனைகளினுட்பட்டு வெளியேறும்போது அது வெற்றியாகவும் இருக்கலாம்; தோல்வியாகவும் இருக்கலாம்; எல்லாம் நமக்கே.

நான் திடீரென நோயில் விழுந்துவிட்டேன். காய்ச்சல் நோயால் ஒரு மாதம் கிடந்து தொல்லைப்பட்டேன், சாவிற்கும் ,பிழைப்பிற்கும் மத்தியில் என் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் எனது நண்பர்களெல்லோரும் என்னைப் பார்த்துச் சென்றார்கள். ஆனால்

எனக்கு வேண்டிய இருவர்மட்டும் வந்து பார்க்கவில்லை. யாரெல்லாம் என்றால் அவளும் அவள் தம்பி அவனுந்தான்.

மனிதர்களின் உறவுக்கு மாற்றுப்பார்க்கும் காலம் அவர்கள் கஷ்ட காலத்தில்தான். கஷ்ட காலத்தில் நண்பர்களும், உறவினர்களும் உதவவில்லையானால் அவர்கள் உண்மையான அன்புடையவர்கள் ஆவார்களா?

நான் சாகக்கிடந்த தருவாயிலும் அவள் என்னை வந்து பார்க்கவில்லையே! எவ்வளவு அன்பாகவும் ஐக்கியமாகவும் என்னிடம் பழகியிருந்தாள். நோயில் வீழ்ந்துகிடந்த சமயத்திலெல்லாம் அவள் வந்தாளா வந்தாளா என்றுதானே என் விழிகள் அவளை நாடிக்கொண்டிருந்தன. அவள் வந்து என்னைப் பார்த்திருந்தால் எனக்கு எவ்வளவு சமாதானமாக இருந்திருக்கும்? அவளைக் கண்டாலே என் நோய் குணமடைந்து விடுமே. அவள் என்னிடம் காட்டியதெல்லாம் வெறும் பாசாங்குதானா?

என் மனதிற்கு அந்த எண்ணமே உண்டாகவில்லை. அவள் என்னை வந்து பார்க்கவில்லை என்பது ஒரு மன்னிக்க முடியாத குற்றமாக இருந்தபோதிலும் அவளை நேரிலேயே இதைக் கண்டு கேட்டுவிடவேண்டும் என்று எண்ணினேன். அவள் அப்போது என்ன காரணம் சொல்வாள் என்பதை அறிய எனது மனம் விரும்பியது. அவள்மீது வெறுப்பு ஏற்படுவதற்குப் பதிலாக அன்புதான் வளர்ந்து வந்தது. அவளைச் சந்திக்கத் துடிதுடித்துக்கொண்டிருந்தேன்.

எனது நோய் நாளுக்கு நாள் குணமடைந்துகொண்டு வந்தது. எனது மெலிவும் மாறி வெளியில் நடப்பதற்குச் சிறிது வலிவும் இடமும் ஏற்பட்டுக்கொண்டு வந்தன. ஒரு நாள் மாலைப்போதில் கொஞ்ச தூரம் நடந்துவர வெளியில் புறப்பட்டேன். நான் நடந்துகொண்டு போகும்போது என் எதிரே ஒரு சிறுவன் வந்துகொண்டிருந்தான். அது அவன் தானு? ஆம் அவனே! அவள் தம்பி. ஆனுல் அவன் மெலிந்திருந்தான். சூரிய ஒளியில் வாடும் மலரைப்போல் பொலிவிழந்திருந்தான். என்னை அவன் கண்டான். ஒன்றுமே பேசவில்லை. நான் அவன் கையை வலியப் பிடித்தேன். பேசாமல் நின்றுன். அவனது கையில் ஊதுவத்திக் குழல் ஒன்று இருந்தது. அவனிடம் பேசுவதற்குச் சந்தர்ப்பத்தை உண்டாக்க ஊதுவத்திக் குழலைப் பார்த்து 'இது எதற்கு?' என்றேன்.

'பிரார்த்தனைக்கு' என்றுன்.

'எங்கே பிரார்த்தனை' என்றேன்.

'அக்காளின் சமாதியில்' என்று சொல்லி அவன் குபீரென்று அழுதுவிட்டான்.

என் தலை சுழன்றது. என் நெஞ்சடைத்தது. எனக்குப் பேசவே முடியவில்லை. திமிர்பிடித்து நின்றுவிட்டேன். சுய உணர்வு வந்த சமயம் அவன் என் முன்னே இல்லாததைக் கண்டேன்.

அந்தகாரத்தோடு வீடு வந்து சேர்ந்தேன். இப்போது அவள் எங்கே? அவள் இந்த உலகத்தில் இல்லையா?

# ஏமாற்றம்,

தபால்காரன் வீரம்மையிடம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்தக் கடிதத்தைப் பெற்றதும் அவளுடைய சந்தோஷந்தான் என்ன! எவ்வளவோ நாட்களாக எதிர்பார்த்திருந்த கடிதம் அன்றுதான் கிடைத்தது. அதில் தன் கணவர் என்னென்ன செய்திகள் எழுதியிருக்கிறார், என்பதையறிய அவளது உள்ளம் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தது. நேராக ஓடி வடக்குவீட்டு முத்துக்கிருஷ்ணன் மகன் ஆறுமுகத்தின் கையில் அந்தக் கடிதத்தைக் கொடுத்தாள். ஆறுமுகம் அதை அவளிடம் வாசித்துக் கேட்பித்தான்.

இலங்கையில் ஜப்பானிய விமானங்கள் வந்து தாக்குதல் ஆரம்பித்தபடியால் தான் கூடிய சீக்கிரம் புறப்பட்டு விடுவதாக அவள் கணவன் அதில் எழுதியிருந்தான். அதைத்தவிர அதில் வேறொரு விஷயமும் குறிப்பிடவில்லை.

வீரம்மையின் கணவன் சாமிக்கண்ணு இலங்கைக்குப் போய் ஐந்து வருடங்கள் முடிந்திருந்தன. இந்த ஐந்து வருடங்களின் மத்தியில் அவன் ஒரு கடிதம்கூட எழுதியது கிடையாது. ஆனால் இப்போதுதான் தன்னுடைய மனைவிக்கு இந்தக் கடிதத்தை எழுதியிருந்தான்.

2

சாமிக்கண்ணு உள்ளூரில் கூலிக்குக் கமலக்கிணறு இறைத்துக் கொண்டிருந்தான். காலை முதல் அந்திகருக்கும் வரை உள்ள சோளங்காடு பூராவும் நீர்பாய்ச்ச வேண்டும். பிறகு பண்ணையார்வீட்டு வேலை; இவ்வளவும் செய்தபிறகு தான் அவனுக்கு எட்டணு காசு கிடைக்கும். இதைக் கொண்டு அவன் என்னென்ன செய்வான்! ஒருமணி நேரம். எல்லும் தோலுமாக இருக்கும் பண்ணையாரின் அந்தக் காளை களிடம் அவன் படும் தொல்லைகளுக்கே இக் கூலி போதாத தாக இருந்தது.

இந்தச் சமயத்தில் அடுத்தவீட்டுக் குப்பன் இலங்கை யிலிருந்து வந்திருந்தான். அவன் இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் 'டி மேக்கராக' இருந்தானும். வரும்போது ஏராளப் பணமுடன் வந்தான். அதுமட்டுமா! விதவிதமான சாமான்கள்! அவனது மனைவிக்கு உயர்ந்த பட்டுச்சேலைகள்; பிள்ளைகளுக்கு சில்க்கு ஜம்பர்; பாடர் பாவாடை; விளையாட் டுச் சாமான்கள்; ஜாக்லட்டு; டின்பிஸ்கற்று; இன்னும் என்ன வெல்லாமோ! இங்கிருந்து போகும்போது பயணச் செல வுக்கே கடன் வாங்கிக்கொண்டு போயிருந்தான். இப்போது அவன் கொண்டுவந்திருந்த புதுப்பணத்தால் அவன் வீட்டிற்கே 'கொளும்புக்காரன் வீடு' என்னும் நாமகரணம் சூட்டப்பட்டிருந்தது.

இதைப் பார்த்ததும் வீரம்மைக்கும் தனது புருஷனை யும் இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்னும் ஆசை உண் டாயிற்று. இந்தக் கருத்தைச் சாமிக்கண்ணிடம் தெரிவித்

தாள். அவனும் சம்மதித்துவிட்டான். எத்தனை நாட்கள் தான் அவன் பண்ணையாரிடம் கஷ்டப்படுவான்! இலங்கைக்குப் பயணம் செய்வதில் அவனது கஷ்டமும் தொலையும். அதோடு புதுப்புது இடங்களைப் பார்ப்பதற்கு வசதியும் வாய்க்கும்.

நகையை ஈடுவைத்துச் சாமிக்கண்ணுக்குப் பயணச் செலவுக்குப் பணம் கொடுத்தாள் வீரம்மை. சாமிக்கண்ணும் பண்ணையாரின் வேலையிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டு மனைவியிடம் பயணமும் சொல்லிக்கொண்டு இலங்கைக்குப் போய்விட்டான்.

* * * * *

இலங்கையில் இரண்டு, மூன்று தினங்கள் ஊர்சுற்றுவதிலேயே சாமிக்கண்ணுக்குக் கழிந்தன. பயணச் செலவு போக மீதியிருந்த காசுகளும் அதில் செலவாகிவிட்டன. பிறகு ஒருவர் சிபாரிசைக் கடிதம் மூலம் அவன் தேயிலைத் தோட்டம்போய் வேலைக்கமர்ந்தான்.

சாமிக்கண்ணை மலைகளில் சுவாதந்திரியமாய்ச் சுற்றித் திரியும் 'மலேரியாக்' காய்ச்சல் பிடித்து வாட்டத் தொடங்கியது. இதனால் அவன் அடிக்கடி தொல்லைப்பட்டான். அவன் உடல் நன்றாக மெலிந்துவிடவே சக்தியும் குன்றிவிட்டது.

அவனுக்குப் பண்ணையாரின் கமலக்கிணற்று வேலையை விட இது மிகவும் கஷ்டம் உடைய வேலையாகக் காணப்பட்டது. அதோடு மலையிலேயே தங்கி வாழ்வதும் பெருஞ்

சிறையாகிவிட்டது. இதனுல் வாழ்க்கையில் ஒருவித மகிழ்ச்சியும் இல்லாமல் போய்விட்டது.

எப்போது இந்த வேலையிலிருந்து விடுதலை அடைவோம் என்று அவன் இயற்கையைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். ஒருநாள் தேயிலைத் தோட்டத்திலிருந்து கொளும்பு நகருக்கு ஓடிவந்துவிட்டான். கொளும்பில் அவனுக்கு வேறு ஒரு தொழிலும் கிடைக்கவில்லை. கையில் காசும் இல்லை. ஹார்பரிலும், கரிமடுவத்திலும் வேலை செய்ய அவனது சக்தி இடம் கொடுக்கவில்லை. சாப்பாட்டுக்கும் வழியில்லாத அந்தச் சமயத்தில் பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கையே அவனுக்குச் சிறந்ததாகத் தென்பட்டது. இந்த வாழ்க்கையில் கொஞ்சம் நாட்கள் கழிந்தன.

இந்த மாதிரியான சமயத்தில் அவன் தன் மனைவிக்குக் கடிதம் போட இஷ்டப்படவில்லை. உள்ளமட்டில் உள்ளூர்ப் போய்ச் சேர்ந்துவிட்டால் மிகவும் நல்லது என்பதாக அவனுக்குத் தோன்றியது. ஆகவே பிச்சைவாங்கி உண்ணும் வாழ்க்கையிலேயே சொந்த ஊர்ப்பயணத்திற்குக் காசு சேர்க்க ஆரம்பித்தான்.

வெறுங்கையுடன் தன் மனைவியைக் காண்பதற்கு மிகவும் வெட்கப்பட்டான். ஆயினும் வேறுவழி இல்லை. போய்த் தான் தீரவேண்டும். இதே சமயத்தில்தான் ஜப்பானியக் கப்பல்கள் இலங்கையைத் தாக்க ஆரம்பித்தன. இது அவனுக்கு சொந்த ஊர்ப்பயணத்திற்கு நல்ல காரணமாக ஆகிவிட்டது. தன் வரவைத் தன் மனைவிக்கு அறிவிக்கத்தான் ஒரு கடிதம் வீரம்மைக்கு அனுப்பியிருந்தான்.

3

வீரம்மை தன் கணவன் கடிதத்தைப் பார்த்ததும் பல வித மனோராஜ்யங்களில் மூழ்கினாள். தன் கணவன் முன்னை விட இப்போது நல்ல ஆரோக்கியமுடையவனாக இருப்பான் என்பது அவளின் மனக்கற்பனை. அஃதுடன் அவன் வரும் போது அதிகப் பணம் கொண்டுவருவான் என்பதும் அவளின் நம்பிக்கையாக இருந்தது.

தனக்காக அவன் கொழும்பிலிருந்து என்ன என்ன சேலைகளெல்லாம் கொண்டு வருவான்! எவ்வளவு தின்பண்டங்கள்! தான் புதிய உடையை அணிந்திருக்கும்போது அந்த உடையை எத்தனை பெண்கள் கவனிப்பார்கள்; அப்போது அவர்கள் தன்னிடம் என்ன என்ன கேள்விகளெல்லாம் கேட்பார்கள்; தான் அவர்களிடம் என்ன பதில் சொல்லவேண்டும் என்பன போன்ற இந்தச் சிந்தனைகளில் அவள் தன்னை மறந்து பேரானந்தம் எய்தினாள்.

கடிதம் வீரம்மையிடம் கிடைத்த ஒரு வாரத்திற்குள் சாமிக்கண்ணு சொந்த வீடுவந்து சேர்ந்தான். கையில் ஒரு பொட்டணமும் உண்டு. நல்ல வெள்ளை உடையே அணிந்திருந்தான். பணம் சம்பாதித்து வருபவனுடைய மகிழ்வுக் கலை அவன் முகத்தில் இல்லை. இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டாள் வீரம்மை.

தனது கணவன் வீட்டின்முன் டிறங்குப் பெட்டிகளுடன் ஜட்காவில் வந்திறங்குவான் என்ற வீரம்மையின் நெடு நாளைய எண்ணம் பலூன்போல் உடைந்து சூன்யமாயிற்று. அவள் தனது மனோராஜ்யத்தில் ஏமாற்றமே அடைந்தாள்.

சாமிக்கண்ணு வந்தகோலத்தில் தனது கணவனைச் சித்தி ரித்திருந்த அவளது மன அறையின் படம் ஒரு விநாடியில் மங்கிப் போயிற்று.

வந்த கணவனிடம் அவள் விரிவாகச் செய்தியொன்றும் கேட்கவில்லை. முதன் முதல் அவனுக்குச் சாப்பாடு செய்ய வேண்டும் என்ற எண்ணமுடன் சமையல் வேலையை ஆரம் பித்தாள். தட்டுப்பட்ட சாமான்களுக்கு அடுத்த வீட்டுக் காரியிடம் தன் கணவன் வரவைக் கூறி, பின் தருவதாகக் கடன் வாங்கினாள். சமையலும் முடிந்தது. கடைசியில் இலை வாங்க வீரம்மையிடம் சில்லரைக் காசு இல்லை. அடுத்த வீட்டுக்காரியிடம் இலை கடன் கேட்டாள். ஏற்கனவே அவள் வீட்டில் இலை இல்லாதிருந்தது.


மனைவி இலைக்காக அலைவதைச் சாமிக்கண்ணு அறிந்து கொண்டான். பசியால் கொதிக்கும் அவன், அவளைப் பார்த்து "தாயி! நீ ஏன் கஷ்டப்படுகிறாய்! சாப்பாட்டுப் பாத்திரம் என்னிடம் இருக்கிறதே!" என்று தன் பொட்ட ணத்தைக் கையில் எடுத்தான்.

சாமிக்கண்ணு பொட்டணத்தைக் கையில் எடுத்ததும் சாப்பாட்டுப் பாத்திரத்தைப் பார்ப்பதற்கும், அதோடு பொட்டணத்தில் உள்ள சாமான்களை அறிவதற்கும் ஆசைப் பட்ட அவள், அவன் பக்கம் வந்து சேர்ந்தாள்.

பொட்டணத்தை அவிழ்த்தான் சாமிக்கண்ணு. அத னுள் இரண்டு கந்தல் பழந்துண்டுகளும், அவன் பிச்சை வாங்கிச் சாப்பிட்ட ஒரு எச்சில் கோப்பையுமே இருந்தன. கோப்பையை வெளியில் எடுத்தான் சாமிக்கண்ணு.

அதைக் கண்ட வீரம்மை ஒன்றும் தோன்றாது நின்றுவிட்டாள். அந்தப் பொட்டணத்திலிருந்த அவள் சிறு நம்பிக்கையும் அழிந்தது. அவளது முகத்தில் கவலையின் சாயல் வந்து சூழ்ந்தது. இதே சமயத்தில் வெளியினின்றும் ஒரு குரல் "வீரம்மா! அரிசி வாங்கினபணத்தைத் தா" என்று கேட்டது.

வீரம்மை கால் தளர்ந்து அப்படியே உட்கார்ந்துவிட்டாள். அவளது கண்கள் மயக்கத்தால் மூடின. அவளது நினைவுத் திரையில், ஏமாற்றம் என்னும் இருளின் மத்தியில் வறுமை என்னும் பிசாசு ஆடிக்கொண்டிருந்தது.



# அத்தர் வியாபாரி.

எங்கள் வாழ்க்கையில் அந்தச் சம்பவம் நிகழ்ந்து சுமார் இருபது ஆண்டுகள் பூர்த்தியாகியிருந்தன. அந் நிகழ்ச்சியைப் பற்றிய நினைவே எங்களுக்கில்லாதிருந்தது. காலத்தின் தீவிரப் போக்கிலே அந்தச் சம்பவம் எங்கள் நினைவுத் திரையை விட்டு மெள்ள மெள்ள மாய்ந்து போயிருந்தது. அதை யாராவது வந்து நினைவு படுத்தி னால் கூட எங்களுக்கு அதைத் தெளிவாக ஞாபகப்படுத் திக் கொள்ளவும், அதிக சிரமம் ஏற்பட்டிருந்தது. ஆனால் எங்கள் வாழ்க்கையில் அந்நிகழ்ச்சியைப் பழையபடி நினைவு படுத்திக் கொள்ளவும், அதை எண்ணி வெட்கப்படவும், ஒரு மகத்தான சந்தர்ப்பம் வாய்த்தது. அதைத்தான் நான் உங்களிடம் சொல்லப் போகிறேன்.

அன்று வெயில் மிகவும் கடுமையாகக் காய்ந்து கொண் டிருந்தது. பிச்சை கேட்டு அந்தப் பெரிய வீட்டு வாசல் முன் அமர்ந்து அந்தப் பக்கிரி பாடிக்கொண்டிருந்தான். அவனது குரலோடு அவன் தகராவின் ஒலியும் கலந்து இன்னிசை இன்பத்தை நல்கின. ஏதோ எங்கள் ஓர் இஸ்லாமியப் புலவரின் பாடல். பொருள் செறிவு கொண் டது.

ஒவ்வொரு பதமும் மிகத் தெளிவாகக் கேட்டது. பாட்டின் பொருளை உணர்ந்து பக்கிரி பாடினன். அந்தப் பாட்டிலே இதயத்தைத் தோயவிட்டுப் பாடினன். கொஞ்ச நேரமாகப் பாடிக்கொண்டிருந்தான்.

கடைசியாக அந்த வீட்டுப் பெண், அவனுக்கு ஒரு பிடி அரிசி கொண்டு வந்து போட்டாள். அதைப் பெற்றுக்கொண்ட பக்கிரி பின்னும் தன் பாடலை நிறுத்த வில்லை. இவன் வெறும் பிச்சையை மட்டும் தன் லட்சி யமாகக் கொள்ளவில்லை. பிச்சை கேட்கும் நிலையில் இத் தகைய பாடல்களைத் தமக்குப் பாடக் கிடைக்கும் சந்தர்ப் பத்தை அவன் பெரிதாக மதித்தான். ஆகவே அப்பா டல் முடியும் வரைப் பாடினன். அந்த வீட்டுப் பெண் பிள்ளையும் கேட்டுக் கொண்டே நின்றாள். வேதாந்தப் பண்ணையில் வந்த அந்தத் தெய்வீகப் பாடல் உண்மை யிலேயே அந்தப் பெண்ணின் உள்ளத்தைக் கூட உருக்கி யிருக்கும். பாடல் முடிந்ததும் பக்கிரி அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான்.

இவனைப் பார்த்த எனக்கு இவனை எங்கேயோ கண்ட ஞாபகம் இருந்தது. இவன் ஓர் சாதாரணப் பக்கிரி என்று எனக்குத் தோன்றவில்லை. ஏதாவது ஓர் இரகசியம் இவ னிடம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இவன் இவ்வாழ்வு கொள்வதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும். என்பதாக எனக்குத் தோன்றின.

பிச்சைக்கார வாழ்வில், அடர்த்தியாகத் தாடி வளர்ந் திருந்த இவனது முகம் அருட் பொலிவால் எழில் பெற் றிருந்தது. இம்முகம் இவன், பண்பு நிறைந்த ஒருவன்

என்றும், சிறந்த நிலையில் இருந்தவன் என்றும் காட்டிக் கொடுத்தது. ஏறக்குறைய அறுபது வயது இருக்கலாம் இவனுக்கு. இவனது இத் தோற்றம் எனது நெஞ்சத்தில் ஒருவித ஆர்வத்தையும், துடிப்பையும் எழுப்பின. இவ னோடு கொஞ்சம் நெருங்கிப் பழகவேண்டும் என்பதாக உறுதி செய்துகொண்டேன். என்னிடம் அறியாத ஒரு பாசம் எங்கோவுள்ள அந்தப் பக்கிரியிடம் எனக்கேற் பட்டது.

ஒருநாள் குளத்தங்கரை மரத்தினடியில் நிழலுக்காகப் படுத்திருந்தேன். அப்போது இந்தப் பக்கிரி அங்கு வந்து சேர்ந்தான. தனது கந்தல் துணிப் பொதிகளில் கட்டி வைத் திருந்த அரிசியை எல்லாம ஒன்ருகச் சேர்த்தான். சுமார் ஒருபடி அரிசி இருக்கும். அவன் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "அல்லாஹ் கிருபை செய்தான்" என்று சொல்லிக் கொண்டான். ஏனென்ருல் கொஞ்ச நாட்களுக்கிடையில் அவனுக்கு இவ்வளவு அரிசி என்றும் கிடைத்ததில்லை. பிறகு தன் பொதிகளில் மடக்கி வைத்திருந்த வத்தல், உப்பு, வெங்காயம் இவைகளையும் எடுத்துப் பார்த்துக் கொண்டான். இவனுக்கு அன்று ஆனந்தம்தான். எல்லாம் அன்று அவனுக்குள்ள அவசியத்திற்கு அதிகமாகவே இருந்தன.

பிறகு பக்கிரி அங்கிருந்து புறப்பட மெள்ள ஆயத்த மாஞன். எல்லாவற்றையும் நன்ருகக் கவனித்துக்கொண் டிருந்த நான் அவனைப் பார்த்து,

"ஐயா நமக்கு எந்த ஊர்?" என்று இதமாக ஒரு கேள்வி கேட்டேன்.

என்னை ஏறிட்டுப் பார்த்தான் பக்கிரி. காலத்தின் சக்தியால் கோடுகள் இடப்பெற்ற அவனது முகத்தில் எண்ணங்கள் அலையடித்ததை நன்றாக அறிய முடிந்தது. எனது கேள்விக்கு அவன் பதிலே சொல்லவில்லை. மறுபடியும் நான்,

"தங்களைத்தானே, தங்கள் ஊர் விலாசம் என்ன?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் "மிகத் தூரம், காயல் பட்டணம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதுதான்" என்றார்.

"இந்தப் பக்கம் வந்து எத்தனை நாட்கள் இருக்கும்?"

"ஐயா, மூன்று மாதங்கள் ஆகுது."

'உங்களுக்குப் பெண்டுபிள்ளைகள் இல்லையா?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் பக்கிரியின் முகம் திடீரென ஒரு மாற்றம் அடைந்தது. ஒருவேளை இந்தக் கேள்வி அவனது நெஞ்சத்தைப் புண்படுத்தியிருக்கலாம் போல் தோனறியது. உடனேயே அவன், நான் வேறு கேள்விகள் கேட்பேன் என்று பயந்தோ, என்னமோ "பொழுதாகிவிட்டது, போகவேணும்" என்று சொல்லிய வண்ணம் நடையைக் கட்டினான்.

இந்தக் கேள்வியால் பக்கிரியின் முகம் மாறுதல் அடைந்ததையும், அவன் வழி நடை உடனே கொண்டதையும் பார்த்து முன்னர் அவனைப்பற்றி நான் கொண்டிருந்த சந்தேகம் கூடக்கொஞ்சம் எனக்கு வலுப்பெற்றது. அவனைப்பற்றித் தெளிவாக அறிவதற்கு என்னவோ என் மனம் துடித்துக்கொண்டிருந்தது.

பக்கிரி கொஞ்சதூரம் நடந்துவிட்டான். அவனைக் கைதட்டி அழைத்தேன். அவன் மறுபடியும் என் பக்கம் வந்து சேர்ந்தான். எனது சட்டைப் பையிலிருந்து நாலணுவை எடுத்துக் கையில் வைத்துககொண்டு "நான் கேட்டவைகளில் தங்களுக்கு ஏதாவது வருத்தம் உண்டுமா? தங்களைப்பற்றி அறியத்தான் கேட்டேன், இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று அந்த அணுவை நீட்டினேன்.

என் முகத்தை நன்ருய்க் கவனித்த பக்கிரி என்னைப் பார்த்து "ஹஸரத், தாங்கள் நல்லா இருக்கவேணும், எனக்கு இந்த அணு வேண்டாம், எனது அவசியத்திற்கும் அதிகமாக இன்று என்னிடம் எல்லா சாமான்களும் இருக்கின்றன, பிந்தியொருநாள் வாங்கிக்கொள்கிறேன், மன்னிக்கவேணும்" என்று சொல்லியவண்ணம் பயணத்திற்கு என்னிடம் வழி கேட்கும் பாவத்தில் என் முகத்தைப் பார்ததான்.

இந்த ஆபூர்வப் பிரகிருதிக்கு நான் விடை கொடுத்தனுப்பினேன். அன்றுமுதல் எனக்கும் பக்கிரிக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுவிட்டது. கண்ட இடங்களிலெல்லாம் அவன் எனக்கு "ஸலாம்" சொல்வான், நானும் ஸலாம் சொல்வேன்.

* * * * * * *

அன்று பௌர்ணமி, சந்திரன் உலகிலுள்ள அழகில்லாப் பொருட்கள் மீதும் தனது மோஹன ஒளிக் கதிரைப் பொழிந்து இந்த உலகையே அமர உலகாக்கிக்கொண்டிருந்தான்.

பள்ளியில் வந்தவர்களுக்கெல்லாம் "நேர்ச்சை" விளம்பினார்கள். அதை வாங்கிக்கொண்டு போவோர் பேசிய குரல் என் காதுகளில் வந்து ஒலித்துக்கொண்டிருந்தது.

அந்த வேளையில் எங்கள் வீட்டு நாய் தெருவில் குரைக்கும் சப்தம் கேட்டது. நாய் யாரையோ துரத்துகிறது என்பதை உணர்ந்த நான் தெருவிற்கு ஓடினேன். அங்கே இதே பக்கிரியை நாய் துரத்திக்கொண்டிருந்தது. பக்கிரியின் தோற்றம் நாய்க்குச் சந்தேகத்தை உண்டாக்கியது போலும்!

நாயை விலக்கி ஓட்டினேன். பக்கிரி என்னை ஆள் தெரிந்து கொண்டான். அவனுக்கு என்னைக் கண்டதில் சமாதானம் உண்டாயிற்று.

"பள்ளியில் 'நேர்ச்சை' வாங்கிக் கொண்டு வந்தேன். வழியில் நாய் பிடித்துக்கொண்டது" என்றான்.

அன்று பூராவும் பக்கிரி சாப்பிடவில்லை யென்பதை அவன் ஈனக் குரல் காட்டியது. அவனை வீட்டுக்கு அழைத்து வந்து வயிறு நிறைய உணவு கொடுத்தேன். சாப்பாடு முடிந்ததும் பக்கிரி வெளித் திண்ணையில் வந்தமர்ந்தான். நானும் விளக்கை எடுத்துக் கொண்டு அவன் சமீபம் வந்து உட்கார்ந்தேன்.

பக்கிரியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. விளக்கின் ஒளியில் அவனது முகம் அவனது களங்கமில்லாத் தன்மையை எடுத்துக் காட்டியது.

எனது சந்தேகததைத் தீர்க்க, பக்கிரியின் வாழ்க்கை இரகசியத்தை அறிய அதுதான் சரியான தருணம் என்பதை ஊகித்தறிந்தேன்.

ஏனென்றால் நாங்கள் இருவரும் தனிமையாகவே இருந்தோம். பக்கிரியும் என் மீது நல்லன்போடும் மரியாதையோடும் இருந்தான். என்னிடத்தில் நல்ல நம்பிக்கையும் இப்போது பக்கிரிக்கு ஏற்பட்டிருந்தது.

"பக்கிரியாரே, அன்றொரு நாள் நான் தங்களிடம் தங்கள் குடும்பத்தைப் பற்றி விசாரித்ததும் தங்கள் முகம் ஒருவித மாற்றம் அடைந்ததே. இதன் காரணம் என்ன? தங்கள் வாழ்க்கையில் ஏதாவது சம்பவம் நிகழ்ந்தது உண்டா? அப்படி உண்டானால் அதை நான் அறியலாமா?" என்ற கேள்வியை நான் மெதுவாகக் கேட்டேன்.

பக்கிரி கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். பிறகு அவன் என்னைப் பார்த்து,

"தாங்கள் எனது வாழ்க்கையை அறிய ஆசைப்படுகின்றீர்கள். சிலருக்கு ஒருவர் வாழ்விலுள்ள வெற்றி, தோல்விகளைக் கேட்டறிவதில் ரசனை பிறக்கிறது. இன்னுஞ் சிலருக்கு அடுத்தவர்க்கு தமது வாழ்வின் கஷ்ட நஷ்டங்களைச் சொல்வதில் சமாதானமும், சந்தோஷமும் உண்டாகின்றன. எனது வாழ்க்கை உண்மையில் ஒரு கதையாகவே இருக்கிறது. விருப்பமானால் சொல்கிறேன். நான் அதை மறைவாகவே வைத்திருக்கிறேன். அது எனது வாழ்க்கையில், இப்போது நான் மறைத்து வைக்க வேண்டிய ஒரு இரகசியமாகவே இருக்கிறது.

நான் அதைத் தங்களிடம் சொல்வதற்குத் தயங்கவில்லை. தங்களைப் போன்ற உத்தமமான மனிதர்களின் உள்ளப் பான்மையை நான் நன்றாக அறிவேன். இதில் எனது இரகசியம் வெளிப்படாது. இதனால் எனக்கு ஒருவித சாந்திபேதான் ஏற்படும். எனது வாழ்க்கைக் கதையைச் தொடங்குகிறேன். கேளுங்கள்" என்று சொல்லியவண்ணம் பக்கிரி தன் கதையை ஆரம்பித்தான்.

இருபது வருடங்களுக்கு முன், நான் அத்தர் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். துருக்கியிலிருந்தும், அரேபியாவிலிருந்தும் எனக்கு ஏராளம் அத்தர் வந்து கொண்டிருந்தது. குலாப், ரோஸ், தாளம்பூ, மல்லிகை, கஸ்தூரி முதலிய உயர்தரமான அத்தர்கள் என்னிடமிருந்துதான் வேறு யாருக்கும் மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கவேண்டும்.

இந்த வியாபாரத்திற்கு எனக்குத் துணையாக றஹீம் என்னும் ஒரு வாலிபன் இருந்தான். அவன் யாருமற்றவன், கதியில்லாதவன், நான் அவனை என் பிள்ளை மாதிரியே வளர்த்து வந்தேன்.

றஹீம் இருபதுக்கும் குறையாத வயதுடையவன். அழகு நிரம்பிய அவனது முகம் எப்போதும் மலர்ச்சி பெற்றே இருக்கும். அழகைப் போலவே அவனிடம் நல்ல குணங்களும் குடிகொண்டிருந்தன. யாரிடமும், மரியாதையாகவும், இனிமையாகவும் பேசுவான், வேடிக்கையாகப் பேசுவதிலும் அவன் வல்லவன்.

தன்னிடம் யாராவது அத்தர் பரீட்சைக்கு வந்தால் போதும், விடவே மாட்டான் அவர்களை. எப்படியாவது அவர்கள் கையில் ஒரு தோலா அத்தர் வைத்துக் கட்டி விடுவான். அவனால் எனது வியாபாரமும் நல்ல வளர்ச்சி யடைந்து வந்தது. ஏராளமான பணமும் வந்து குவிந்தது.

நாங்கள் அத்தர் விற்கப் போகும்போது மைதீன் சாகிபு என்ற எனது நண்பர் ஒருவர் வீட்டிற்குப் போய்த் தான் வேறு இடங்களுக்குப் போவோம். அவர் இருக்கும் சந்தியைத் தாண்டித்தான் ரோட்டுக்குப் போகவேண்டும்.

மைதீன் சாகிபு ஒரு சமயத்தில் நல்ல பணமுடையவராக இருந்தார். அந்தக் காலத்தில் அவர் என்னிடம் எவ்வளவு ரூபாய்களுக்கு அத்தர் வாங்கியிருக்கிறார்! ஆனால் இப்போது அவர் கை கெட்டுவிட்டது. அன்னப் பாலுக்கே திண்டாடும் அவரிடம் அத்தர் வாங்கப் பணம் ஏது? ஆனாலும் நாங்கள் அவர் வீட்டுக்குப் போகாமல் இருப்பதில்லை. எங்களுக்குள் பழக்கம் அப்படி ஏற்பட்டு விட்டது.

அவருக்கு மூன்று குமர்கள் (பெண்கள்) உண்டு. இருவர் பக்குவம் அடைந்த பெண்கள். ஒருத்தி அப்போதுதான் பருவம் எய்தும் நிலைமையில் இருந்தாள். அவள் பெயர் பாத்திமா என்பதாகும்.

பாத்திமா யாரிடமும் தாராளமாய்ப் பேசும் இயல்புடையவள். கள்ளம் கபடம் அறியாத சிறுமி. நல்ல குணவதி. அவர்கள் வீட்டில் நான் இருக்கும்போது சில சமயம் எனக்குத் தண்ணீர் அவசியப்பட்டால் அவள்

தான் கொண்டு தருவாள். அந்தச் சமயங்களில் அவள் என்னிடம் "மாமா', எனக்கு அத்தர் இல்லையா?" என்று கேட்பாள். நான் அவள் முந்தானையை அத்தரால் நனைத்துக் கொடுப்பேன். அவள் அளவு கடந்த மகிழ்ச்சியோடு தனது உம்மாவுக்கும் சகோதரிகளுக்கும் அதன் வாசத்தைக் காட்டுவாள்.

ஒருநாள் மைதீன் சாகிபு என்னிடம் எனது தனிமையான வாழ்க்கையைப் பற்றிச் சொல்லி நான் இப்படியாகத் தனி வாழ்க்கை நடத்துவதில் அந்தியகாலம் எனது நிலைமை ஆபத்தாக முடியுமென்று தக்க உதாகரணங்களுடன் விளக்கிச் சொன்னார். அதோடு என்னை மறுமணம் செய்யவும் தூண்டினார்.

எனக்குக் குணவதியான பாத்திமாவை நிக்காஹு செய்து தருவதற்கு இவர் இசைந்தார். இவர் அந்த இளங் குமரியை எனக்கு நிக்காஹு செய்து தருவதற்குக் காரணம் நான் அவளிடம் அதிகம் அன்பு காட்டியதை அவர் அறிந்திருந்தார். மேலும் மற்றப் பெண்களை நிக்காஹு செய்து கொடுப்பதற்கு என்னிடம் பண உதவியையும் எதிர் பார்த்திருந்தார்.

அப்போது எனது முதல் மனைவி மவுத்தாகி (இறந்து) பதினறு வருடங்கள் முடிந்திருந்தன. அதன் பிறகு விவாகமே வேண்டாமென்று முடிவு செய்திருந்தேன். ஆயினும் எனது தனித்த வாழ்வில் பலவித இன்னல்கள் ஏற்பட்டிருந்தன. பொருத்தமான சாப்பாடு கிடையாது. யாரும் கதியற்ற நான் இரண்டு நாள் நோயால் படுக்கை

யில் வீழ்ந்தால் என்னைப் பார்ப்பதற்கு ஒருவரும் கிடை-யாது. இதையெல்லாம் எண்ணி மைதீன் சாகிபு கருத்திற்குநான் இசைந்தேன். பாத்திமாவிடம் நான் அதிகம்அன்பு காட்டியதாலும் அவள் நற்குணங்கள் அனைத்தும்எனக்கு நன்ருகத் தெரியுமாதலாலும் அவளை இரண்டாவதாக நிக்காஹு செய்து கொள்ள நான் மனம இசைந்தேன்.

எனது உதவியால் பாததிமாவின் மூத்த குமர்களை மைதீன் சாகிபு நிக்காஹு செய்து கொடுத்தார். இதற்கிடையே பாத்திமாவும் பக்குவதியாளுள். அவளை அவர் எனக்கு நிக்காஹு செய்து கொடுததார். பதினறு வருடங்களின் பிறகு அந்த முதிய பருவத்தில் நான் இல்லற வாழ்வு நடத்த வந்ததைப் பற்றி ஊரார் அந்தரங்கமாகக் குசுகுசு வென்று என்னவெல்லாமோ பேசிக்கொண்டார்கள்.

பாத்திமா வந்த பிறகு எனது கூம்பிய வாழ்க்கை மூகை மறுபடியும் விரிய ஆரம்பித்தது. வெந்நீர்க் குளி; சுவையான உணவு; வேடிக்கையில பொழுது போக்கு இவையெல்லாம் வந்தன.

பாத்திமா என்னிடம் குழந்தையைப் போலவே கொஞ்சிக் குழைந்து பேசுவாள். அவள் புனிதமான சேவை என்னை அவள்மீது எல்லையற்ற அன்பைச் சொரியச் செய்தது. ஒரு மகள் தன் தந்தையிடம் எவ்வாறு நடந்து கொள்வாளோ, அவ்விதமாகவே பாத்திமாஎன்னிடம் நடந்து கொண்டாள். நானும் அவளை மனப்பூர்வமாக நம்பி வந்தேன். மகளிடம் செல்லும் இயற்கையன்பு என்னிதயத்திலிருந்து அவள் மீது பாய்ந்தது.

பாத்திமா தன் காமக் குறிப்பை ஒரு நாளாவது என்னிடம் காட்டிக் கொள்ளவில்லை, அவளுடைய வேடிக்கைப் பேச்சுகளில் கூட அதன் ஒரு அம்சமும் பிரதிபலிக்கவில்லை. பாத்திமா தனது குடும்பத்திற்காகத் தனது உடன்பிறப்புச் சகோதரிகளுக்காகத் தனது காம இச்சையைத் தியாகம் செய்து விட்டாளா? என்று கூடப் பல சமயங்களில் நான எண்ணியதுண்டு.

எனது ஒய்ந்து நசிந்த உணர்ச்சி சில காலங்களில் தலையெடுத்துத் துடிததாலும், அது பாத்திமாவைக் கண்ட மாத்திரத்தில் மாய்ந்து தணிந்து போகும். அவள் ஓர் அபூர்வப் படைப்பாக எனக்குக் காட்சி கொடுத்தாள்.

கல்யாணம் ஆனபிறகு நான் வீட்டிலேயே இருந்து கொண்டேன். றஹீம் வியாபாரம் செய்து வந்தான். காலையில் வீட்டை விட்டு வெளியே போவான். சாயுங்காலமே வீடு வந்து சேர்வான். அவனுடைய தனி வியாபாரத்திலும் எனது வருவாய்க்குக் குறைவு ஏற்பட்டதில்லை.

றஹீமைக் கண்டு பாத்திமா அன்னியரைக் கண்டு கோஷா முறையில் ஒளிப்பது போல் மறைவது கிடையாது. ஏனென்றால் றஹீம் என் வீட்டு ஆள்தானே? மேலும் பிள்ளைப் பிராயம் முதல் றஹீம் பாத்திமாவோடு பழகியிருக்கிறான். ஆகவே அவர்கள் இருவரும் நெருங்கிப் பழகி கொண்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இவர்களின் இத்தகைய பழக்கத்தில் முதன் முதல் நான் ஒருவித சந்தேகமும் கொண்டதில்லை. றஹீமை நான்

நன்றாக அறிவேன். பாத்திமாவின் குணத்திலும் எனக்குத் துளிகூட சந்தேகம் இல்லை.

நாளடைவில் இந்தப் பழக்கம் எனக்கு மிகுந்த சந்தேகத்தைக் கொடுத்தது. அவர்கள் நடந்து கொண்ட இந்த முறை அவர்கள் இருவருக்கும் ஓர் இணையற்ற ஐக்கியத்தை உண்டுபண்ணி விட்டதாக நான் உணர்ந்தேன். பருவத்தின் ஒற்றுமையும், அழகின் இணைப்பும் அவர்கள் இருவரிடையேயும் ப்ருவ சேஷ்டைகளைக் கூட நடத்தியிருக்குமோ என்று நான் சந்தேகப்பட்டேன்.

அன்று 'மிலாதே ஷெரீபு' கொண்டாட்டம். றஹீம் அன்று வியாபாரத்திற்குப் போகவில்லை. காலையில் நான் 'நாஸ்த்தா' முடித்துவிட்டு ஒரு நண்பரைப் பார்ப்பதற்காக வெளியே போய் விட்டேன். றஹீம் வீட்டில் இல்லை. வெளியேதான் எங்கேயோ போயிருந்தான்.

சாப்பாட்டு வேளையில் நான் மறுபடியும் வீடு திரும்பினேன். வாசலில் மறைவிற்காகக் கட்டியிருந்த திரைச்சீலையை ஒதுக்கி வீட்டினுள் கால் வைத்ததும் நான் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். ஏனெனில் அங்கே றஹீமும் பாத்திமாவும் நெருங்கியிருந்து உடல் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் அவர்கள் இரண்டுபேருக்கும் தூக்கி வாரிப் போட்டதுபோல் ஆகிவிட்டது. பயத்தினாலும், வெட்கத்தினாலும் திகிலடைந்த பாவம் அவர்கள் முகத்தில் பிரதிபலித்தது.

பாத்திமா மெள்ள சமயலறைக்குள் புகுந்துவிட்டாள், றஹீம் வெளியில் நழுவிவிட்டான். நான் இந்தச் சம்பவத்தைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. அவர்களைக் கண்டிக்கவும் இல்லை, மத்தியானச் சாப்பாடு முடிந்தது. றஹீமும் என் கூடவே இருந்து சாப்பிட்டான்.

அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. எனது அறிவு குழப்பமுற்றிருந்தது. பகல் நான் கண்ட காட்சி அப்படியே என் கண்முன் நின்றது. இந்த விஷயத்தில் குற்றவாளி நான் என்பதே என அபிப்பிராயம், இந்தத் தள்ளாத வயதில் மறுபடிம் எனக்கு ஏன் மணம்? அதிலும் அழகு சொட்டும் இந்த இளம் பெண்ணு? எவ்வளவு பெரிய கொடுமை! அவளது உணர்ச்சியை நசுக்க முயன்றது போலானது என் செயல். வெறும் பணத்திற்காக பாத்திமா என் வீட்டுக்கு வந்தாள். ஆனால் அது இங்கு விபரீதத்தில் முடிந்தது.

மாதவ முனிவரும் காமப் பேயின் வசப்பட்டுக் கதியிழந்தனர் என்று கதை கேட்டுள்ளேன். இதை நினைத்ததும் அந்த ஏழை உயிர்கள் நடந்துகொண்டதில் சொல்ல என்ன இருக்கிறது என்று எண்ணினேன். இரும்பும் காந்தமும ஒன்றுபட்டது; இளமையும், பருவமும் கூடியது. இதில் என்ன தவறு?

என்ன இருந்தாலும் நான் மன்னிக்கமுடியாத குற்றத்தைச் செய்துவிட்டேன். பணத்தினுல் ஓரிளம் பெண்ணின் வாழ்வை நாசமாக்கும் நிலைமைக்கு வந்தேன். ஆண்டவன் எனக்குப் பாடம் கற்பித்தான். அவனைத் "தௌபா"

செய்தேன். சிறிய குழந்தையைப்போல் படுக்கையில் கிடந்து விம்மி விம்மி அழுதேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கம் வர ஒரு மணிக்குமேல் ஆகிவிட்டது. அயர்ந்து தூங்கிவிட்டேன். காலையில் எழுந்தேன். எனக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. பாத்திமாவைக் காணவில்லை. "பாத்திமா, பாத்திமா" என்றழைத்தேன். பதிலே இல்லை. தோட்டத்தின் பக்கம் சென்று பார்த்தேன், அங்கும அவள் காணப்படவில்லை. எனது படுக்கையின் பக்கம ஒரு கடிதம கிடந்தது. அதை எடுத்துப் பிரித்து வாசித்தேன். அக் கடிதத்திலிருந்து அவளும், றஹீமும் எங்கோ ஓடிவிட்டதாக அறிந்துகொண்டேன்.

மறுநாள் ஊரார் எல்லோரையும் அழைத்து, அவர்கள் முன்னிலையில் பாத்திமாவை "தியாக்" சொல்லிவிட்டேன். இச் செய்தி எங்கும் காற்றுப்போல் பறந்தது.

அவர்கள் பயணத்தைப்பற்றி நான் ஒருவகையில் சமாதானம் அடைந்தேன். மாபெரும் பாதகச் செயலிலிருந்து தப்பியதுபோல் எனக்கிருந்தது. ஆயினும் ஊரார் விடவில்லை. குசு குசுவென்று என்னவெல்லாமோ பேசிக்கொண்டார்கள். சிலர் பரிஹாசப் புன்முறுவல் செய்தார்கள். இந்த அவமானத்தை என்னால் தாங்கமுடியவில்லை. ஆகவே இனி எனக்கு இந்தச் சிதைந்த வாழ்வே அவசியம் இல்லை என்ற எண்ணமுடன் யாவற்றையும் துறந்து பக்கிரியாகிவிட்டேன. தேசாந்திரம் சுற்றும வாழ்வைக் கைக்கொண்டேன். இந்தப் பயணத்தில் எத்தனையோ பள்ளிவாசல்களையும், புண்ணிய இடங்களையும் பார்த்துவிட்டேன். இந்த

வாழ்வில் எனது அந்திய நாட்கள் அமைதியாகவும், இன்பமாகவும் கழிகின்றன. ஆனால் அவர்கள் இருவரையும்பற்றியுள்ள கவலைதான் என்னை விட்டகலவில்லை" என்று சொல்லி முடித்தான் தனது வாழ்க்கைக் கதையைப் பக்கிரி.

பக்கிரியின் கதையைக் கேட்ட எனக்குப் பேசவே முடியவில்லை. எனது உடலெல்லாம் வியர்த்துவிட்டது. கரை கடந்து பொங்கிய உணர்ச்சி வெள்ளத்தைப் பெருந் தடை செய்து அடக்கிக்கொண்டேன். என்னை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டு நான் பக்கிரியைப் பாா்த்து "ஏன், அவர்கள் இரண்டுபேரும் மறுபடியும் 'நிக்காஹ்' செய்துகொண்டுதான் வாழ்க்கை நடத்துவார்கள். நீங்கள் 'தியாக்' சொன்ன விஷயம் ஊர் பூராவும் பரவியிருக்குமே? அவர்கள் அப்படியேதான் செய்திருப்பார்கள், இதிலென்ன சந்தேகம்?.

"அதை எப்படி நம்பமுடியும்" என்றார் அவர்.

"ஏன், தங்கள் முன்னிலையில் அந்த றஹீமே சொல்லும்போதுமா உங்களுக்குச் சந்தேகம்?" என்றேன்.

பக்கிரி பிரமிப்படைந்தார், "நீயா றஹீம்? என்ற ஆச்சரியக் கேள்வியுடன் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு 'றஹீம், றஹீம்' என்றழைத்தார். இந்தச் சத்தத்தைக் கேட்டுப் பாத்திமாவும் வெளியில் வந்தாள். முதலில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை, பின்னர் யாவும் உணர்ந்து கொண்டாள். இருபது வருடங்களின் முன்னைய நிகழ்ச்சியை விட்டுக் காலம் என்னும் படுதா விலகியது. அவள்

பக்கிரியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள், கண்ணீர் வடித்தாள்.

நாங்கள் மூவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம். எங்களிடம் அவர் அதிக அன்பும், மரியாதையும் காட்டினார். கடைசியாக அவர் விடைபெற்றுக்கொண்டார். நாங்கள் அவரை எங்களுடன் இருந்து வாழ மன்றாடினோம். ஆனால் அவர் அடிக்கடி வருவதாய்ச் சொல்லிப் போனார்.

அதன் பிறகு அவர் வருகைக்காக எத்தனையோ நாட்கள் காத்திருந்தோம். மறுபடியும் ஒருதடவையாவது அவர் எங்கள் கண்ணில் படவில்லை.

அவரை எண்ணியெண்ணித்தான் நான் இந்தக் கதையையும் எழுதி முடித்தேன்.



காமராசர் பல்கலைக்க
அவ்வை
முகம் நூலகம்

THE
M. S. M. PRESS,
Nagercoil: